விலை ரூபா 1 - 25

ஈழநாடு
THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

(1958 — வெள்ளி விழா ஆண்டு — 1983)
மலர் 25 கார்த்திகை 12 ஸபர் 22 இதழ் 287
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 28 11-83

# "இடம்பெயர்ந்த ஆசிரியர் பழைய இடங்களுக்கு திரும்பவேண்டும்"

## தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து யாழ்ப்பாணம் வந்துள்ள ஆண் ஆசிரியர்கள் பழைய பாடசாலைக்குத்திரும்ப வேண்டும் என்று தமிழர் ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம், சங்கத்தின் சார்பில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் சங்க உபதலைவர் திரு. எஸ். அரியதுரை தலைமையில் நேற்று நடந்த பாதிக்கப்பட்ட ஆசிரியர் கூட்டத்திலேயே திரு. மகாசிவம் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

திரு. மகாசிவம் மேலும்தெரிவித்ததாவது:

''750 ரூபா முற்பணத்தை

(10-ம்பக்கம் பார்க்க)

# "புதுடில்லி பேச்சுக்களால் சாதகமான தீர்வு வேண்டும்"

## யாழ். நகரில் பீட்டர் கெனமன்

(அலுவலக நிருபர் கா. யோகநாதன்)

"தமிழ் மக்களின் பிரச்னைக்கு தீர்வு காணப்படவேண்டும். இது சம்பந்தமாக, புதுடில்லியில் பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் தற்போது எந்தவித அறிக்கையும் விடமுடியாதிருக்கிறது. புதுடில்லி பேச்சுவார்த்தையில் ஏதாவது சாதகமான தீர்வு உருவாக வேண்டும் என விரும்புகிறேன். இப்பேச்சுக்கள், மறைமுகமாகவும், வித்தியாசமான முறையிலும், நடைபெற்றாலும்கூட, நல்லமுறையில் தீர்வு காணப்படவேண்டும்."

யாழ்ப்பாணத்திற்கு மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டுவந்திருந்த இலங்கை கம்யூனிஸ்ட்கட்சித் தலைவர் திரு. பீற்றர்கெனமன் பத்திரிகையாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டக்காரியாலயத்தில் நேற்று மாலை நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் திரு. பீற்றர் கெனமன் மேலும் கூறியதாவது "தமிழர் பிரச்னை தொடர்பாக ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு ஒன்றுக்கு இடைஞ்சல் புதுடில்லியில் ஏற்படாது. இலங்கையில்தான் அப்படியான இடைஞ்சல் ஏற்படும் அதுவும் அரசாங்கத்தின் ஒரு பகுதியினரால்தான் ஏற்படக்கூடும்.

"மக்கள் தெரிவு செய்துள்ள அரசாங்கம் வடபகுதியில் இல்லாமல் போனது இலங்கையில் மற்றப்பகுதிகளிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது" என்றார்.

## "பாதுகாப்பில்லாததினால் பழைய இடங்களுக்கு செல்ல விரும்பவில்லை"

### பீட்டர் கெனமனிடம் அகதிகள்

(யாழ்ப்பாணம்)
பாதுகாப்பு இல்லாததினால் பழைய இடங்களுக்கு செல்லவில்லை என்று பண்ணை அகதிகள் முகாமிற்கு சென்ற இலங்கை கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. பீட்டர் கெனமனிடம் அகதிகள் தெரிவித்தனர்.

திரு. பீட்டர் கெனமன் நேற்று காலை பண்ணை அகதிகள் முகாமிற்குசென்று பார்வையிட்டார். அகதிகளுடன் நேரடியாக அளவளாவினர்.

பழைய இடங்களுக்குச் செல்ல பயமாக இருப்பதாகவும், இங்கு காணிபெற்று இருக்க விரும்புவதாகவும் அகதிகள் அவரிடம் தெரிவித்தனர்.

(10ம் பக்கம் ...)

# இந்திரா - ஜே.ஆர். சந்திப்பு அடுத்த வாரம் நிகழும்!

(புதுடில்லி)
இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனவுக்கும் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் அடுத்தவாரமே நடைபெறும் என்று தெரிகிறது.

தற்போது நடைபெற்று வரும் பொதுநலவாய தலைவர்கள் மாநாடு முடிவடைந்த பின்னரே இரு தலைவர்களுக்குமிடையே பேச்சுக்கள் தொடங்குமென்று இங்கிருந்துகிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(10-ம் பக்கம் பார்க்க)

## தூத்துக்குடி-கொழும்பு கப்பல்சேவை

# தமிழர் பிரச்னை தீர்வின் பின்னரே ஆரம்பமாகும்!

(சென்னை)
தூத்துக்குடிக்கும் கொழும்புக்குமிடையே சேவையில் ஈடுபடுத்தப்படவிருந்த புதிய கப்பல் சேவை இலங்கைத் தமிழர் பிரச்னை தீர்க்கப்பட்ட பின்னரே ஆரம்பமாகும் என்று நம்பப்படுகிறது.

இலங்கையின் தனியார் நிறுவனமொன்று இப்போக்குவரத்துக்கான அனுமதியைப் பெற்றிருந்தது.

கொழும்பு — தூத்துக்குடி வரையிலான 42 மைல் தூரத்தினை 8 மணி நேரத்தில் கடக்கக்கூடியதாய் இருக்கும் இச்சேவை தலைமன்னார் — இராமேஸ்வரம் கப்பல்சேவை மழை காலத்தில் நிறுத்தப்படுவது போலன்றி வருடமுழுவதும் சேவையில் ஈடுபடும்.

இலங்கைத் தமிழர் பிரச்னை காரணமாக இச்சேவை எப்போது ஆரம்பிக்கப்படுமென்று கூறமுடியாதுள்ளதாகவும் அனேகமாக தமிழர் பிரச்னைக்கு தீர்வுகாணப்பட்டபின்னரே ஆரம்பிக்கப்படும் என்று தெரிகிறது. (சூ)

# தமிழர்க்கு வாழ்வழித்தால் மானத்துடன் வாழமுடியும்

## சிங்கள மக்களுக்கு தமிழக இதழ் யோசனை

(யாழ்ப்பாணம்)
"சமஅந்தஸ்து கேட்கும் தமிழர்களுக்கு வாழ்வழித்தால் சிங்களமக்கள் மானத்துடன் வாழமுடியும்" என்று தமிழகத்திலிருந்து வெளியாகும் 'இதயம் பேசுகிறது' இதழ் கருத்து வெளியிட்டுள்ளது.

ஜெயவர்த்தனபுரிந்துகொள்வாரா? என்ற தலைப்பில் கடந்த 6ம் திகதி இதழில் எழுதப்பட்டுள்ள தலையங்கம் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரிபியன்கடற்பகுதியிலுள்ள சின்னம் சிறிய தீவான "கிரெனடா" நாட்டின் மீது அமெரிக்கா படையெடுப்பு நடாத்தியிருக்கிறது. பலம் பொருந்திய அமெரிக்க வல்லரசுக்கு இந்தத்தீவு பெரிய சொத்தாக கிடைத்துவிட முடியாது. ஆயினும் அங்கே தன்னுடையசார்பில் இருந்த பிரதமர் கொல்லப்பட்டதை அடுத்து இந்தப்படையெடுப்பை நடாத்தியுள்ளது.

[10-ம் பக்கம் பார்க்க]


# பிரத்தியேக வகுப்பு

15 2/4, மணியம்ஸ் கட்டடம் ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(புகையிரதக்கடவைக் கருகாமையில்)

## தாவரவியல் - திரு. சிவவீரசிங்கம்

இவ்வாசிரியரால் யாழ். நகரில் அண்மையில் நிறுத்தப்பட்ட தாவரவியல் வகுப்புகள் ஒவ்வொரு பிரிவுக்கும் அதே நேரங்களில் மணியம்ஸ் கட்டடத்தில் பிரத்தியேகமாக நடாத்தப்படும் பின்வரும் நேர அட்டவணையின்படி.

## 3-12-83 சனி முதல் ஆரம்பம்

சனி, ஞாயிறு

| | | |
|---|---|---|
| பிரிவு A: | 9.30 - 10.30 | [85 Aug] |
| பிரிவு B: | 10.30 - 11.30 | [85 Aug.] |
| பிரிவு C: | 11.30 - 12.30 | [85 Aug.] |
| பிரிவு D: | 12.30 - 1.30 | [84 Aug.] |
| பிரிவு E: | 2.30 - 3.30 | [84 Aug.] |
| பிரிவு F: | செவ், புதன், வியா. 7.00-800 | [84 Aug.] |

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

தனங்கிளப்பு உப தபாற்கந்தோருக்கு ஒருமைல் தூரத்தில் கேரதீவு றோட்டில் வீடுகட்டுவதற்கேற்ற 4 பரப்புக்காணியும் அத்துடன் அடுத்து 74 பரப்பு தென்னை முந்திரிகை செய்யக்கூடிய தோட்டக் காணியும் (தொழிற்சாலை அமைக்கவும் ஏற்றகாணி) விற்பனைக்குண்டு. விபரங்கட்கு K D S. ஆனந்தம், மகிளடி ஒழுங்கை, மட்டுவில் தெற்கு சாவகச்சேரி. 10116

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி கில்னர் ஒழுங்கையில் நாற்புறமும் மதிலும், கட்டுக்கிணறு, புதிய மலசல கூடமும் கொண்ட இரண்டு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தாசன் மரச்சாலை, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். 10144

''பண்ணையில் வளர்த்த பன்றிகளின் இறைச்சி(Pork) விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: வறணி பாம், 145, நியு மார்க்கட், யாழ்ப்பாணம். 10154

''நல்ல இனப் பன்றிக்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: அண்ணு பாம், இணுவில்.'' 10155

மாவிட்டபுரம், காங்கேசன் துறை வீதியில், கந்தசாமி கோவிலுக்குச் சமீபத்தில் 4 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: S. அரியரத்தினம், K. K S. வீதி, மாவிட்டபுரம், தெல்லிப்பழை. 10157

ஆறுகால் மடத்தடிக்கு அண்மையில் மானிப்பாய் றோட்டில் யாழ். மாநகர எல்லைக்குள் ஐந்து பரப்புக்காணி விற்பனைக்குண்டு நேரில் சந்திக்கவும். 68, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 10160

கோண்டாவில் பலாலி வீதி, C. T. B. டிப்போவுக்கு அருகாமையில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி T. E. பாலசுந்தரம், பாமினி கிறஷர், கோண்டாவில் 10168

கோண்டாவில் கிழக்கில் பலாலி றோட்டிற்கு அண்மையில் 5பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 76, சேர். பி. இராமநாதன் றோட், யாழ்ப்பாணம். 10171

யாழ். இந்துக்கல்லூரிக்கு அண்மையில் 95/12 இலக்க வீட்டுடன் கூடிய காணிஉடன் விற்பனைக்குண்டு. மு. இராஜகோபால்(Post Master) No-103, ஐயனர் கோவிலடி யாழ்ப்பாணம். 10174

சங்கானை தேவாலய வீதியை அண்மித்துள்ள குறிஞ்சியன் திடலில் 28½ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்: திரு. க, சிவநேசன், ஆசிரியர், வட்டு. மேற்கு, சிவன்கோவிலடி, வட்டுக்கோட்டை. 10201

நீம் சுகாதார தூபம், நுளம்பு, கொசுகு, இலையான் இவற்றின் தொல்லைகளை நீக்க இயற்கை மூலிகைகளால், சுகாதார முறையில் தயாரிக்கப்பெற்றது. மில்க்வைற் தயாரிப்பு. 10185

நல்ல நிலையிலுள்ள வெஸ்பா ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. காலை 9—மாலை 5மணிக்கு மிடையில் நேரில் தொடர்பு கொள்ளவும். 106, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். 10146

## விற்பனைக்கு

சாவகச்சேரி நகரசபையுள் கச்சாய் றோட், முதலாம் கட்டையில் மா, பலா, தென்னை ஆகிய பயிர்வகைகளுடன் மின் இணைப்புடன் வீடுகள் அமைக்கக்கூடியதுமான ஆறுபரப்புக் காணி விற்பனைக்குண்டு தொடர்பு கொள்க: நமசிவாயம் வேலுப்பிள்ளை, ஆசிரியர், பெரியமாவடி, சாவகச்சேரி, 10184

சாவகச்சேரி-சப்பச்சி மாவடியில் சந்தையிலிருந்து 1 மைல் தூரத்தில் 6½பரப்பு நல்ல தண்ணீர் கிணற்றுடன் காணி விற்பனைக்குண்டு. S. வீரகத்தி, சதா தேநீர்க்கடை, கோட்டடி முன்பாக, சாவகச்சேரி. 10182

உடுவில்-கோவிற்பற்று சங்குவேலி இறையில் கொல்லன்வயலும் வேலக்கைவயலும் என்ற 7½ பரப்பும், உடுவில் இறை மழுவராயர் தோட்டம் 2 பரப்பு (காசிநாதர் சிதம்பரநாதர் சேச் லேன் அருகாமையில்) ஆழ்வார்முதலியார் தோப்பு அடங்காவளவு 4 பரப்பும், கொற்பிட்டி இறைதூம்பம் 5 பரப்பும், முதலிமாதன் பேரில் தோம்பு முருகமூர்த்தி கோவிலுக்கருகாமையிலுள்ளது. 2 பரப்பும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு தொடர்புகொள்ளும் முகவரி: திரு. சி. துரைச்சாமி, மாவிட்டபுரம் கிழக்கு, தெல்லிப்பழை. 10180

யாழ்ப்பாணம் மானிப்பாய் பிரதான வீதியிலிருந்து மிக அண்மையில் 'ஆறுகால்மடம் பாடசாலை வீதியில் வீடு கட்டுவதற்குகந்த 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. காணிபிரித்தும்கொடுக்கப்படும். விபரங்களுக்கு: வ. நல்லையா, குருசு மதவடி. மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. 10202

மட்டுவில் பருத்தித்துறை வீதியில் மகாவித்தியாலயத்திற்கு அருகாமையில் கிணற்றுடன் வீடுகட்டக்கூடிய 7பரப்புக்காணி உடனடியாக விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை. நேரில் தொடர்பு கொள்ளவும். 4, ஓடை ஒழுங்கை, வண்ணார்பண்ணை. 10179

அளவெட்டி வடக்கில் நல்ல சுற்றாடலில் உள்ளதும், கருவப்புலம் பாடசாலைக்கு அருகாமையில் உள்ளதுமான கல்வளவு என்றழைக்கப்படும் வீடு கட்டுவதற்குகந்த கிணற்றுடன் கூடிய ஏழு 7) பரப்புக் காணி விற்பனைக்குண்டு. மின் வசதி பெறக்கூடிய வசதியுமுண்டு. சு. நடேசலிங்கம், அம்பாள் ஸ்ரோஸ், வல்லைவீதி-சங்கானை. 10176

இருபாலை - கோண்டாவில் றோட்டில் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு அண்மையில் பிரபல வர்த்தகர் வீட்டிற்கு அருகாமையில் 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: S. சிவசங்கரன், பிள்ளையார் கோவிலடி, வியாபாரி மூலை, பருத்தித்துறை.(10204

## தேவை

பல சிறுகைத்தொழில் தெரிந்தவருக்கு முதலீடு செய்யக்கூடியவர் தேவை. மகாதேவன், 159/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 10206

## சேவை

வர்த்தக ஸ்தாபனங்கள், நிதி நிறுவனங்கள் என்பனவற்றுக்கு கணக்கு பரிசோதனைக்கு உகந்த முறையில் கணக்கு புத்தகங்கள் எழுதி Trial Balance, Bank Reconciliation, Blance Sheet என்பன தயாரித்து கொடுக்கப்படும். வருமானவரி சம்பந்தமான ஆலோசனையும் வழங்கப்படும். விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 10075 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 10075

## வாடகைக்கு

வியாபாரத்திற்குஏற்றகடைகள் வாடகைக்குக் கொடுக்கப்படும். நேரில் சந்திக்கவும். 68, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 10162

## வகுப்பு

Scientific Cutting Cake icing, Shorteats Hairstyle ஆகியவற்றிற்கு திங்கள், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாட்களில் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. விபரங்கட்கு The Ladies Academy இல. 27, 3வது ஒழுங்கை மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 10071

## WANTED

Wanted on Rent — Two Roomed annexe with attached Bath, water service and other facilities close to or round about Tellippallai or Jaffna Town for a healthy elderly couple only. Please inform R. A. Vairamuttu, "Shantha Villa", Tellippallai. 10127

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மாவட்ட நீதிமன்றம்
மல்லாகம்

மூளாய் என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற குஞ்சர் ஐயம்பிள்ளை என்பவரின் மரணசாதனமற்ற மரணச் சொத்துக்களின் விடயத்தில்.

-மரணமெய்தியவர்.

குஞ்சர் ஐயம்பிள்ளை கைம்பெண் பாக்கியம், மூளாய்

-மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் } இல. ரி/175

எதிர்

ஐயம்பிள்ளை மகன் கருணேஸ்வரி
ஐயம்பிள்ளை அகிலேஸ்வரன் இருவரும் மூளாய்.

-எதிர் மனுதார்கள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்துக்களை நிருபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1984ம் ஆண்டு தை மாதம் 4ந் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுன கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1983ம் ஆண்டு ஐப்பசி மாதம் 11 திகதி.

கோட்டுக்கட்டளைப்படி
ஆழ்வார் சிவபாதசுந்தரம்
பதிவாளர்

இ. த. விக்னராசா
மனுதாரின் சட்டத்தரணி.
(10128)

உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் ருதிரோற்காரி வருடம் கார்த்திகை மாதம் 14-ந் திகதி (30-11-83) புதன்கிழமை காலை 9-40 — 11-25 மணியளவில் வரும் மகர லக்கின சுபவேளையில்,

எமது சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**தியாகலிங்கம்**
(உரிமை:
மலர்ரெக்ஸ்ரைல்ஸ், யாழ்.)
அவர்களுக்கும்

எமது சிரேஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**பவளமலர்**
அவர்களுக்கும்

இறைவன் திருவருளை முன்னிட்டு திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அவ்வமயம் தாங்களும் குடும்பசகிதம் சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

க.வே.பொ. மயில்வானம்
(உரிமை:மைலன்ஸ்-யாழ்ப்பாணம்)
தம்பதிகள்
அறுகம்புலம்,
தங்கோடை, காரைநகர்.
(10137)

கா.க.வி. சிவசுப்பிரமணியம்
தம்பதிகள்
கா. ஈ. விஸ்வலிங்கம்
(முன்னாள் கி. ச. தலைவர்-காரைநகர்)
பாலாவோடை,
களபூமி, காரைநகர்.

## 2-வது பிறந்த தின வாழ்த்து



யாழ்ப்பாணம் 41/2, மானிப்பாய் வீதியைச் சேர்ந்த லோகதாஸன் சாந்தா தம்பதிகளின் அருமைப் புதல்வி

### உஷாந்தி

தனது 2-வது பிறந்த தினத்தை இன்று பெரியப்பாவின் இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அன்புத்தம்பி பிரசாத் சுந்தரலிங்கம், பெரியப்பா, பெரியம்மா, நாரந்தனைப் பெரியப்பா, பெரியம்மா, அம்மம்மா, அம்மப்பா, கொட்டடி அப்பப்பா, அப்பம்மா, மாமா, மாமி, அண்ணாமார், அக்காமார் ஆகியோர் துர்க்கையம்மன் அருளால் சீரும் சிறப்பும் பெற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

10186

## அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்,
நம்பிக்கைச் சட்டத்தின் 42 (2)ம் பிரிவின்
கீழான விண்ணப்ப விடயத்தில்:

(1) சி. வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம், வல்வெட்டித்துறை.
(2) ச. மாப்பாணர் கந்தசாமி, துன்னாலை.
(3) சுப்பையா தர்மலிங்கம், நெல்லியடி.
(4) முத்தையா சதானந்தன், கற்கோவளம்.

எல்லோரும் ஸ்ரீவல்லிபுரஆழ்வார் தேவஸ்தான
-தர்மகர்த்தா சபையினர்.
மனுதார்கள்

வழ. இல: TR 125

எதிர்

(1) நீலப்பிள்ளை காங்கேசு, கரவெட்டி மேற்கு.
(2) நடராஜா செல்வராஜா, கரவெட்டி மேற்கு.

எதிர்வாதிகள்

துன்னாலை வடக்கு ஸ்ரீவல்லிபுரஆழ்வார் கோவிலுக்குரியதும் பின்னாற் காணும் அட்டவணையில் நன்கு விபரிக்கப்பட்டுள்ளதுமான ''தும்மலோடை நி.பர. 11'' எனும்ஆதனத்தை விற்பனை செய்ய குறித்த கோவிலின் தர்மகர்த்தா சபையினர் என்ற வகையில் மேற்குறித்த மனுதார்கள் இம் மன்றிற்கு விண்ணப்பித்துள்ளார்கள். இவ்விண்ணப்பத்திற்குஆட்சேபனை ஏதும் இருப்பின் அவற்றை இவ்விடயத்தில் அக்கறை உள்ள ஆள் எவரேனும் இம்மன்றில் 1983 மார்கழி ஏழாம் திகதி காலை 9 மணிக்கு தோற்றி தெரிவிக்கலாம் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### மேற்குறித்த அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வடமராட்சிப் பகுதி கட்டைவேலிக் கோவிற்பற்று கரவெட்டி வென்றிக் குறிச்சி இறை ''தும்மலோடை நி.பர. 15'' இதில் வடக்குப் புறமாக ''நி. பர. 11'' இதற்கு எல்லை கிழக்கு கார்த்திகேயர் சிற்றம்பலத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் வடக்கு ஒழுங்கை மேற்கு தெரு தெற்கு மிகுதியாதனம் இதடங்கல் முழுவதும்.

1983 கார்த்திகை 24ம் திகதி.

(ஒப்பம்)
மு. க. முத்துக்குமார்,
மனுதார்களின் சட்டத்தரணி.

10152

★ பிரிட்டன் வரலாற்றில்

# 'ஸ்கொட்லண்ட்யார்ட்'டை திணற வைத்திருக்கும் மாபெரும் கொள்ளை!

## 2 கோடியே 70 லட்சம் ஸ்டேர்லிங் பவுண் தங்கம் துப்பாக்கிநபர்களால் அபகரிப்பு!

லண்டன், நவ. 27

பிரிட்டனின் சரித்திரத்திலேயே முதன் முறையாக மாபெரும் கொள்ளைச் சம்பவம் ஒன்று நேற்று நிகழ்ந்தது. இரண்டு கோடியே எழுபது லட்சம் ஸ்டேர்லிங் பவுண்கள் பெறுமதியான தங்கப் பாளங்கள் 'ஹீத்ரோ' விமான நிலையத்திற்கு அருகிலுள்ள களஞ்சிய சாலையொன்றிலிருந்து கொள்ளையிடப்பட்டன.

இக்கொள்ளைச் சம்பவம் லண்டன் பொலிசாரையும், அவர்களது முக்கியமான புலனாய்வுத் துறையினரும், சர்வதேசப் புகழ்பெற்றவர்களுமான 'ஸ்கொட்லண்ட் யார்ட்' துப்பறிவாளரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

கைத்துப்பாக்கிகள் சகிதம் வந்த ஆறு நபர்களே இத்துணிகரக் கொள்ளையை நடத்தினர். இவர்கள் அத்தங்கக் களஞ்சியத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை முதலில் மடக்கிப் பிடித்தனர். பின்னர் அவர்களின் உடல்மீது பெட்ரோலை ஊற்றினர் இதனைத் தொடர்ந்து தமது நடவடிக்கைகளை முறியடிக்க முனைந்தால் தீமூட்டி விடுவதாக அவர்களைப் பயமுறுத்திக் கொள்ளையை நடத்தினர்.

இக்கொள்ளையர்கள் எவ்வாறு பின்னர் தப்பிச்சென்றனர் என்பது தெரிவிக்கப்படவில்லை. அது மர்மமாகவே இருக்கிறது.

பிரிட்டனில் 1963ம் ஆண்டிலேயே மிகப் பெரிய கொள்ளைச் சம்பவம் நடந்தது. 'தி கிரேட் டிரெயின் ரொபறி' என்ற அக்கொள்ளை தபால் புகையிரதமொன்றில் நடந்தது. அப்போது 26 லட்சம் ஸ்டேர்லிங் பவுண்களே கொள்ளைபோயின. நேற்று நடந்துள்ள கொள்ளைச் சம்பவம் அக்கொள்ளைச் சம்பவத்தைவிடப் பலமடங்கு பெரியதாகவுள்ளது.

'ஸ்கொட்லண் யார்ட்' நிபுணர்கள், கொள்ளை போன தங்கப் பாளங்கள் ஒவ்வொன்றும் 25 றுத்தல்கள் எடையுள்ள 270 பாளங்கள் என்று தெரிவித்தனர் அத்துடன் கொள்ளையர்கள் நாட்டைவிட்டு வெளியேறுதவகையில் பாதுகாப்பு ஏற்பாடுகளை விரிவாக்கியுள்ளனர்.

இது இவ்வாறிருக்க, இச்சம்பவத்தைப்பற்றிச் சுடச்சுடத் தகவல்களைச் சுவாரஸ்யமாக அறியும் வாய்ப்பைப் பிரிட்டிஷ் மக்களில் அநேகர் இழந்துள்ளனர். ஏனெனில் பிரிட்டனின் பத்திரிகைக் காரியாலயங்கள் பலவற்றின் அச்சகப் பகுதி ஊழியர்கள் கடந்த சில தினங்களாக வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (கி)

'நோபல்' சமாதானப் பரிசை

## நேரில்பெற போலந்து அரசு வாலேஸாவுக்கு அனுமதி!

வார்ஸோ, நவ. 27.

''போலந்தின் தடைசெய்யப்பட்ட சொலிடாறிற்றி, தொழிற்சங்கத்தலைவர் திரு. லேக்வாலேஸா 'நோபல்' பரிசை நேரில் சென்று பெற்றுவர தடை எதுவும் இல்லை'' என்று போலந்து வெளிநாட்டமைச்சர் கூறினர்.

திரு. வாலேஸாவுக்கு இந்த ஆண்டுக்கான 'நோபல்' சமாதானப் பரிசு கிடைத்துள்ளது தெரிந்தது. இப்பரிசை அவருக்குக் கொடுப்பது குறித்து போலந்து அரசாங்கம் அதிருப்தி கொண்டுள்ளது எனவே நோர்வேயின் 'ஒஸ்லோ' நகரில் எதிர்வரும் டிசம்பரில் இப்பரிசைப் பெற்றபின்னர் தாம் மீண்டும் தாயகம் திரும்ப போலந்து அரசு தடைவிதிக்கலாம் என்று வாலேஸா அச்சம் தெரிவித்தார்.

இதுகுறித்து போலந்து வெளிவிவகார அமைச்சர் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு அவர் கூறினர்.

திரு வாலேஸா நோபல் பரிசை பெறுவதற்கு தமது மனைவி 13 வயது மகன் பத்திரிகையாளரான நண்பரொருவர் ஆகிய மூவரையும் அழைத்துச்செல்லவிரும்பினர். ஆனல் போலந்து அரசு வாலேஸா தவிர்ந்த ஏனைய மூவரும் தமது கடவுச் சீட்டுகள் மற்றும் பிரயாணப் பத்திரங்களுக்கு தனித்தனியே விண்ணப்பிக்க வேண்டும். அவர்களது விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அவர்களை வாலேஸாவுடன் செல்ல அனுமதிப்பது பற்றி முடிவெடுக்கப்படும். என்று அறிவித்துள்ளது. (கி)

சைப்பிரஸ் விவகாரம்:

## தீர்வுகாண்பதற்கு ஐந்து நாடுகள் காமன்வெல்த் குழு!

புதுடில்லி, நவ, 27

சைபிரஸ் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்காக ஐ. நா. சபையுடன் இணைந்து செயல்பட ஐந்து நாடுகள் கொண்ட குழுவை காமன் வெல்த் தலைவர்கள் அமைத்துள்ளார்கள்.

ஒய்வுக்காக கோவா சென்றிருந்த காமன் வெல்த்தலைவர்கள் சைபிரஸ் பிரச்னையில் இந்த ஏகோபித்த முடிவை எடுத்துள்ளதாக நேற்றுசெய்திநிருபர்கள் மத்தியில் பேசிய அவுஸ்திரேலியப் பிரதமர் பொப்ஹொப் தெரிவித்தார்.

அவுஸ்திரேலியா, இந்தியா, கயானு, நைஜிரீயா, சாம்பியா ஆகிய ஐந்து நாடுகளுமே இக்குழுவில் அங்கம் பெறுகின்றன. இந்நாடுகளின் அமைச்சர்கள் அல்லது உயர் அதிகாரிகள் கொண்ட குழுவே இப்பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கு ஐ. நா. வுடன் சேர்ந்து ஒத்துழைக்கும்.

பொதுவாக சைபிரஸில் உருவாக்கப்பட்ட புதிய துருக்கிய தனிநாட்டினை அங்கிகரிக்காது அதனை நிராகரிக்கும் வகையிலேயே இவர்கள் சைபிரஸ் பிரச்னையை அணுகியுள்ளார்கள்.

கிரனடா விவகாரத்தில் ஆபிரிக்கத் தலைவர்களுக்கும் கரிபியன் நாடுகளின் தலைவர்களுக்கு மிடையில் முரண்பாடுகள் இருந்து வருகின்றன. அமெரிக்காவின் படையெடுப்பினை நியாயப்படுத்த முயன்ற ஆறு கரிபியன் தலைவர்களுக்கும், அதனை எதிர்க்கும் ஆபிரிக்கத்தலைவர்களுக்கும் இடையில் இன்னமும் கருத்து முரண்பாடுகள் இருந்து கொண்டிருக்கின்றன. இப்பிரச்னையையும் சுமுகமான தீர்வுக்கு கொண்டுவரலாமென்று அவுஸ்திரேலியப் பிரதமர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (சூ)

## கம்பியூட்டர்கள் காசோலைகளை மாற்றும்

புதுடில்லி, நவ. 27

வங்கிகளில் காசோலைகளை 'கம்பியூட்டர்கள் கொண்டு மாற்றும் நவீன முறை பம்பாய், புதுடில்லி ஆகிய நகரங்களில் அடுத்தாண்டு ஆரம்பத்திலிருந்து அறிமுகப்படுத்தப் படவுள்ளது.

படிப்படியாக இந்த நவீன முறை 85ம் ஆண்டளவில் இந்தியா முழுவதிலுமுள்ள முக்கிய நகரங்களில் அறிமுகமாகிவிடுமென்று தெரிவிக்கப்பட்டது.

இப்புதிய காசோலை மாற்றும் முறையினல் தற்போது இருந்துவரும் 4 மணி நேர தாமதம் 15 நிமிடங்களாகக் குறைந்துவிடுமென இந்திய வங்கியாளர்கள் தெரிவித்தனர் பணப்புளக்கம் அதிகரித்துள்ளதையும் வங்கிவாடிக்கையாளர்கள் கருத்தில் கொண்டே இக் கம்பியூட்டர் காசோலை மாற்றும்முறை அறிமுகப்படுத்தப்படுவதாகவும் அவர்கள் கூறினர். [கி]

## 39 பேருக்கு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்தில் கடமையாற்றும் 39 உத்தியோகத்தர்களுக்கு 84-ம்ஆண்டு தொடக்கம் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

மன்னர், வவனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலுள்ள செயலகங்களுக்கு இவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். [மா]

## மீண்டும் திறக்கப்படவில்லை!

(பண்டத்தரிப்பு)

கொள்ளைச் சம்பவத்தைத் தொடர்ந்து கடந்துபோன மூன்று மாதங்களாக மூடப்பட்டிருக்கும் பிரான்பற்று உப-தபால் நிலையம் இதுவரை மீண்டும் திறக்கப்படவில்லை.

யாழ். மாவட்டத்தில் கொள்ளைச் சம்பவங்களினல் மூடப்பட்டிருந்த சகல உப-தபால் நிலையங்களும் அண்மையில் மீண்டும் திறக்கப்பட்டு இயங்கிவருகின்றபோதிலும் இந்த உபதபால் நிலையம் தொடர்ந்தும் மூடப்பட்டிருப்பதினல் இப்பகுதி மக்கள் கஷ்டத்திற்குள்ளாகியுள்ளனர். (கு)

# 'தியாகோகாஸியா' தீவு மொறீஸியசுக்கே சொந்தம்!

## புதுடில்லிதொலைக் காட்சிப்பேட்டியில் பிரதமர் ஜெகந்நாத்

புதுடில்லி, நவ. 27

''தியாகோகாசியா தீவு மொறீஸியசுக்கே சொந்தமானது. மொறீஸியஸ் சுதந்திரமடையுமுன்னர் அதனிடமிருந்து கட்டாயப்படுத்தி பிரிட்டன் தியாகோகாஸியாவைப் பெற்றுக்கொண்டது'' என்று மொறீஸியஸ் பிரதம மந்திரி திரு. அனுருத் ஜெகந்நாத் கூறினர்.

திரு. ஜெகந்நாத், பொது நலவாய அமைப்பு உச்சிமகாநாட்டில் பங்குபற்றுவதற்காக புதுடில்லிவந்துள்ளார். நேற்று முன்தினம் அவர் இந்திய தொலைக்காட்சிச்சேவைக்கு வழங்கியபேட்டியிலேயே மேற்கண்டவாறு கூறினர்.

பிரதமர் ஜெகந்நாத் மேலும் கூறியதாவது:-

''மொறீஸியஸ் தியாகோதாஸியா மீது எப்போதும் உரிமை கோரியேவரும். அதனை மீட்டெடுக்கும் நடவடிக்கைகளை மேலும் தீவிரமாக்கும். ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம், மற்றும் சர்வதேச நிறவனங்களில் தியாகோகாஸியா விவகாரத்தை மொறீஸியஸ் மேலும் விரிவாக்கும். பொது நலவாய அமைப்பும் இவ்விவகாரம் குறித்து அக்கறை காட்டவேண்டும்'' என்றார்.

மொறீஸியஸ் கடந்த சில வருடங்களாக அதன் அருகே இந்துமா கடலில் இருக்கும் தியாகோகாஸியா தீவு மீது உரிமை கோரிவருகிறது பிரிட்டன் அத்தீவைத் தனது கட்டுப்பாட்டின்கீழ் வைத்துள்ளது.

பிரிட்டனிடமிருந்து அமெரிக்கா அத்தீவைக் குத்தகைக்குப் பெற்று தற்போது அதில் தனது கடற்படைத் தளம் ஒன்றை நிறுவியிருப்பது குறிப்பிடத்தக்கது.

தியாகோகாஸியா தீவு மீது மொறீஸியஸ் உரிமை கோருவதை இந்தியா உட்பட அணிசேரா நாடுகள் பல ஆதரிச்கின்றன.

மொறீஸியஸ் பிரதமர் திரு. ஜெகந்நாத் மேலும் தமது தொலைக்காட்சிப் பேட்டியில், இந்துமாசடலை அண்டிய நாடுகள் பிராந்திய ஸ்தாபனங்களை உருவாக்கவேண்டுமென்றும், மடகஸ்கார், ஷீஷெல்ஸ் ஆகிய தீவுகளுடன் மொறீஸியஸ் விரைவில் பிராந்திய ஸ்தாபனங்களை உருவாக்குமென்றும் கூறினர். (கி)

## கிளிநொச்சி செயலகம் இயங்குவதில் தடங்கல்

(ஏ. வி. மாணிக்கம்)

கிளிநொச்சிப் பகுதி தனி மாவட்டமாகப் பிரிக்கப்பட்டு மாவட்ட அரசாங்க அதிபரும் நியமக்கப்பட்ட பின்னர் அங்கு செயலகம் ஒன்று இயங்குவதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

அண்மையில் கிளிநொச்சி சென்ற யாழ் செயலக அதிகாரிகள் குழு பல இடங்களையும் கட்டிடங்களையும் பார்வையிட்ட பின்னர் கிளிநொச்சி பட்டிணசபை மண்டபத்தையும் அதனேடு சேர்ந்திருக்கும் பொது நூலகத்தையும் இணைத்து செயலகமாக இயங்க வசதி இருக்குமெனச் சிபார்சு செய்திருந்தனர். அதே நேரம் இருகட்டிடங்களிலும் முன்னர் நடைபெற்ற உபஅலுவலக வேலைகள் பழைய நெல் சந்தைப்படுத்தும் சபைக் கட்டிடத்துக்கும், நூல் நிலையம் கரடிப்போக்கு பழைய நூல் நிலையக்கட்டிடதுக்கும் மாற்றம் செய்யப்படலாம் என்றும் குழுவினர் தெரிவித்திருந்தனர்.

கிளிநொச்சி பட்டிணசபை மண்டபத்தையும்பொது நூல் நிலையத்தையும் செயலகமாக மாற்றக் கூடாதென பிரதம மந்திரி உத்தரவிட்டுள்ளதால் இத்தடங்கல் ஏற்பட்டுள்ளது.

இதுசம்பந்தமாககிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ள திரு. எஸ். ஜெயநாதன் யாழ் மாவட்ட அரசாங்க அதிபருடன் நேற்று ஆலோசனை நடத்தினர்.

நேற்றுப் பிற்பகல் திரு. ஜெயநாதன் யாழ். செயலக அதிகாரிகளுடன் கிளிநொச்சி விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

பரந்தன் சந்திக்கு அண்மையிலுள்ள நெல் சந்தைப்படுத்தும் அலுவலகக் கட்டிடட கிளிநொச்சி மாவட்ட அரசாங்க செயலகமாக இயங்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த கட்டிடத்தில்றேட்டரி கழகத்தின் அகதிகள் முகாம் கடந்த 4 மாதங்களாகஇயங்கி வருகிறது. இந்த முகாமில் 358 அகதிகள் தங்கியுள்ளனர் இவர்களில் சிலரை வேறு முகாம்களுக்கு அனுப்பவும் மற்றையோருக்கு வேறு இடத்தில் றேட்டரி கழக முகாமை ஆரம்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (மா)

## மணிவாக்கு

ஆடம்பர வாழ்க்கையைக் கண்டு பிரமிக்காதே! அந்த வாழ்க்கை பயம் நிறைந்தது. சுதந்திரமும் அங்கு இல்லை. உடல் உழைப்புடன் கூடிய எளிய வாழ்க்கையே மேலானது.

— சுவாமி விவேகாநந்தர்

## நமதுநோக்கு

# அடுத்த வருட உலகம்

எங்கள் (13 - 11 - 83) வார இதழில் 'உலக அழிவு' பற்றிய கட்டுரை ஒன்று மக்களுடைய மனதில் அச்சத்தையும் பரபரப்பையும் ஏற்படுத்தக்கூடியதாக எழுதப்பட்டதென்று ஒரு வாசகர் கட்டுரை எழுதியிருப்பது சிந்தனைக்குரியது. உலகம்அழியும் ஆண்டு 2026 மாதம், தேதி, அதில் குறிப்பிட்டதே அந்த வாசகரின் கண்டனத்துக்கு நியாயமான காரணமாகும்

இவ்வித சோதிடம் எவராலும் சொல்ல முடியுமா? கூறியபடி நடக்குமாவென்பது வேறு விடயம்.

உலகஅழிவு பற்றி படித்து வைத்த விடயம் ஒன்றை இதுகாறும் அவிழ்த்து விடாத நாம் இன்றைய சந்தர்ப்பத்தில் குறிப்பிடுவது பொருத்தமாகின்றது.

பிரபல ஆங்கில எழுத்தாளரும் அறிஞருமான ஜோர்ஜ் ஓர்வெல் (George Orwell) தமது பல்லாயிரக் கணக்கான வாசகர்கள் நடுங்கும்படியாக எழுதிய நூல் — '1984'. மாதம், தேதி, குறிப்பிட்டு விஞ்ஞானமுறையிலோ, சோதிட முறையிலோ உலக அழிவு பற்றி அவர் பேசவில்லை; ஆனால் 1984-ம் ஆண்டுக்கு அப்பால் உலகம் நிலைக்காதென்றும்; அது எவ்வாறு அழியும் என்ற திடுக்கிடும் வர்ணனைகளையும் அதில் வெளியிட்டார்.

இதனை எழுதியவர் மிகப் பிரபலமான அறிஞர்; இந்த நூலைக் குறிப்பிட்டு ஒரு கட்டுரை எழுதினவர் இந்த நூற்றாண்டு கண்ட கணித, தத்துவ மேதை பேற்றிராண்ட் ரசல் (Bertrand Russell); தமது 98-வது வயதில் 1970-ம் ஆண்டு மறைந்த ரசல் பிரபு இக் கட்டுரையை 1956ல் எழுதியிருந்தார்.

அவருடைய கருத்தின் சுருக்கம்: ''ஜோர்ஜ் ஓர்வெல் எழுதிய பயங்கர நூல் எவரையும் கலக்கிவிடவில்லை; நூலாசிரியர் கடும் நோயாற் பாதிக்கப்பட்டிருந்தபடியால் அவ்வாறு எழுதினுரென்று பலர் கருதினர்; உண்மையில் நூல் எழுதிச் சில நாட்களில் அவர் காலமானுர்; ஆனுல் 1914-ம் ஆண்டுக்கு முன் உயிரோடிருந்தவர்கள் கண்ட உலகத்தை இன்றைய உலகுடன் ஒப்பிட்டால் நூலாசிரியர் ஓர்வெல் வெளியிட்ட கருத்துக்களைக் கேலி செய்ய முடியுமா? அன்றிருந்த அமைதியான மகிழ்ச்சிகரமான உலகம் இன்று எவ்வாறிருக்கிறது?''

இருபத்தெட்டு வருடங்களுக்குப்பின் நடப்பது பற்றி நாம் அசட்டையாயிருந்தாலும் உலகம் போகும் போக்கை அவதானித்தால் ஆசிரியரின் நூலுக்குக்கண்டனம் தெரிவிப்பது நியாயமாகாது என்றுர் ரசல்.

எனவே கி. பி. 2026 வரைக்கும் நாம் சோதிடத்தை நம்பியோ அல்லது கண்டித்தோ காலம் கழிக்க வேண்டியதில்லை.

அடுத்த வருடமே 'ஆட்டம் குளோஸ்'' என்ற கருத்தை இன்று ரசல் பிரபு இருந்தால் எவ்வளவு சிந்தனைத் தெளிவுடனும் ஆதாரபூர்வத்துடனும் நிலைநாட்டியிருப்பாரென்பது எவரும் ஒத்துக்கொள்ளக் கூடியது.

உலக அழிவு எந்த நிலையில் இன்று இருக்கின்றதென்பது பற்றி எமக்கு சோதிடம் அவசியமா?

ஆசிரியர் ஓர்வெல் குறிப்பிட்ட '1984' மிகப் பொருத்தமாகத் தெரியவில்லையா?

இதனைப்படித்து, கேட்டு, மற்றவர்களுக்கும் அறியப் படுத்துபவர் எவரும் அஞ்ச இடமுண்டா? இன்றுஎதனையும் அஞ்ச இடமுண்டா?

சாதாரணமாக எங்கள் நாட்டை உதாரணமாக எடுத்தால் இது பற்றிய கருத்து சாதகமாகவா அல்லது பாதகமாகவா இருக்கிறது?

நேற்றைய பத்திரிகையே தமிழ்மக்கள் பிரச்னை பற்றி குறிப்பிடும் போது ஒரு பெரிய யுத்தத்துக்கு இடமளிக்கும் செய்தியைக்குறிப்பிடுகிறது; இந்தியா- அமெரிக்கா- அதற்கிடையில் சின்ன இலங்கை! இவ்வாறு ஒரு யுத்தம் தொடங்கினுல் மற்ற நாடுகள்' ஏவுகணை 'நேற்றோ' ஏவுகணை 'வார்சோ' நாடுகள்- இவை குந்திக்கொண்டு கூதற்காய் வார்களோ?

அப்படி எதுவும் தொடங்கினுல் - சில நிமிடங்களில்- ஆகக்கூடிய சில மணித்தியாலங்களில், தமிழ் சிங்களம். கன்னடம் இந்தி- வேறெந்த மொழியும் இனி மேல் மொழிக்குழப்பம்உலகில் ஏற்படாதவாறுஒதுங்கி விடும், ஒழிந்துவிடும்

இது கேலியோ கனுவோ அல்ல, இந்த அபாயத்தை நன்குணர்ந்த உலகத்தலைவர்கள் கேட்டுப் பிரமிக்கும் வகையில் எங்கள் ஜனுதிபதி காமன்வெல்த் மாநாட்டில் எதனைப்பேசினுர்; அங்கு தலைவர்கள் எதிர்பார்த்த 'இலங்கைப் பிரச்னை' அல்ல; அவர்கள் ஏமாற்றமும் வியப்பும் அடையும் வண்ணம், புத்த பெருமானும், மகாத்மாகாந்தியும் இறுகப் பிடித்த 'சாத்வீகம்'ஒன்றே இன்று உலக அழிவைத் தடுக்க முடியுமென்றுர்.

கொழும்பு தினசரி ஒன்று, ''இதனைக் கேட்ட உலகத் தலைவர்கள் பிரமித்துவிட்டனர்'' என்று குறிப்பிட்டிருக்கிறது.

உலகின் இன்றைய நிலை; மேற்கு ஜெர்மனியில் ஏவுகணைகள், அதற்கு அணித்தாக ரஷ்ய ஏவுகணைகள்— நாட்டுவதற்கு வல்லரசுகள் சுபமுகூர்த்தம் இந்த வருட முடிவுக்கு முன்னரே தேடிப் பார்க்கின்றனர்.

1984ம் ஆண்டு உலகம் தப்பிவாழ எமது நாட்டில் இன ஒற்றுமை மறுபிறப்பெடுக்க ஜனுதிபதி ஜெயவர்த்தனுவின் ஆலோசனையைவிட வேறெதுவும் உண்டா?

# ஆடிக் கலவரம் ஆக்கிரமித்த புதிய 'பட்ஜட்'

ஆடிக்கலவரத்தினுல் அல்லலுற்ற மக்கள் — நலிவுற்ற நாடு — பல ஆண்டுகள் பின் தள்ளப்பட்ட பொருளாதாரம் — இயற்கையின் வஞ்சனையால் ஏற்பட்ட வரட்சி — இவற்றுக்கு மத்தியில் பலவித எதிர்பார்ப்புக்கள் ஹேஷ்யங்களை முறியடித்து அமைதியான — அதிகம் பளுவற்ற வரவு - செலவுத்திட்டம் ஒன்றைத் தந்துள்ளார் நிதி அமைச்சர் றெனி டி மெல். இந்த வரவு - செலவுத் திட்டம் பற்றி சிந்தித்த போதெல்லாம் - இதனை வரைந்தபோதெல்லாம் ஆடிக்கலவர அழிவுகள் அவரது மனக்கண் முன் பூதாகாரமாக காட்சியளிக்காமல் இருந்திருக்க முடியாது.

ஆடிக்கலவரத்தினுல் ஏற்பட்ட தேசிய நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் மக்களினுல் மேலும் மேலும் சுமைகளைத் தாங்க முடியுமா? என்ற கேள்வியும் அவரின் உள்ளத்தில் தோன்றி அவரை அலைக்களித்திருக்கும்.

இக்கேள்விக்கு விடைகாண முயன்ற றெனி, மிகவும் நாசூக்காக அந்நிய படையெடுப்பினுல் சேதமுற்ற நாட்டை விட மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள எமது நாட்டை மீண்டும் கட்டி எழுப்புவதற்கு நாட்டின் சகல மக்களும் தம்மை அர்ப்பணிக்க வேண்டும் என ஒரு போடு - பாட்டு விட்டார். மலை போன்றசுமைகள் இல்லாவிடினும் சிறு பளுக்களையும் சுமத்தி விட்டார்.

நாட்டின் எந்த ஒரு மூலையிலாவது ஒரு காரோ, வீடோ ஏன் ஒரு சிறு வானெலிப் பெட்டியோ எரிக்கப்பட்டால் என்ன நொறுக்கப்பட்டால் என்ன இந்த நாட்டு மக்கள் சகலருக்குமே இழப்பு ஏற்படுகிறது. நேரடி இழப்பு ஒரு சிலருக்கு மறைமுக இழப்பு சகலமக்களுக்கும். இது எவருக்கும் புரியாததல்ல.

எடுத்துக்கூறிய அவர், அதற்கான ஆலோசனையையும் பின்வருமாறு கூறுகிறுர்.

சட்டமும் ஒழுங்கும் நிலைபெற்று வேறுபட்ட மக்கள் மத்தியில் சமாதானமும் சௌஜன்யமும் ஆட்சிசெய்தால் நாம் இழந்த நம்பிக்கையை மீண்டும் பெறமுடியும் என்பதே அவரது அந்த யோசனை.

இந்த பட்ஜட் விவாதத்தை எதிர்க்கட்சி சார்பில் ஆரம்பித்துவைத்த அத்தனகலை எம். பி. கூறியதுபோல். இந்த அரசாங்கம் 77ம ஆண்டு ஆட்சிக்கு வந்தது முதல் சமர்ப்பித்த ஆறு 'பட்ஜட்'களில் எல்லாம் கடந்த அரசாங்கத்தைத் திட்டித் தீர்த்த நிதி அமைச்சர், திட்டித் திட்டிக் களைத்துவிட்டாரோ தெரியாது. 7வதுபட்ஜட்டில் கடந்த அரசைத் திட்டிக்கொள்ளும் வாய்ப்பை அவர் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. தொடர்ச்சியாக 7 பட்ஜட்டுகளைச் சமர்ப்பித்து சாதனை ஒன்றை உருவாக்கிவிட்ட அவரது இந்த உரையைத்தான் ஆடிக்கலவரம் ஆக்கிரமித்துக்கொண்டதே.

செய்துவரும் சாதுரிய நடவடிக்கைதான் இதுவென்பது எவருக்கும் தெரியாததல்ல.

உலகில் பெறுமதி குறைந்த நாணயங்களில் எமது நாணயமும் ஒன்று. இந்நிலையில் வெளிநாட்டு விலைகளை எமது ரூபாவுககு மாற்றினுல் பெருந் தொகைதானே வரும்.

அப்படியிருந்தும் விலைகளை ஒப்பிடும்போது அந்த நாடுகளின் பொருளாதார நிலை, வேதனம், வாழ்க்கைவசதி ஆகியவற்றுடன் எமது நாட்டு நிலையை ஒப்பிட்டுப் பார்ப்பது கிடையாது.

எது எவ்வாறிருப்பினும் டிசம்பர் முதல் அதிகரிக்கப்படும் தபால் கட்டணத்தினுல் நிதி அமைச்சருக்கு 13 கோடி ரூபா மொத்தமாகக் கிடைக்கின்றதே.

புத்தகங்கள், சஞ்சிகைகள் மீதான இறக்குமதி வரி நீக்கப்பட்டிருக்கிறது.

எமது மக்களின் அறிவுப் பசிக்கு இனி தங்குதடையின்றி விருந்து கிடைக்கப்போகிறது என்பது உண்மைதான்.

எமது கலாச்சாரம், பண்பாடு என்பனவற்றுக்கு ஒவ்வாத குப்பைகள் அதிக செலவின்றி தருவிக்கப்பட்டு எதிர்காலசந்ததி சீரழியப் போகின்றதே

வெளிநாட்டு சஞ்சிகைகள், புத்தகங்களுக்கு இருந்த கட்

# இனப்பிரச்னை தீர்வை வலியுறுத்துகிறுர் 'றெனி'

சபையிலிருந்து

இ. கந்தசாமி

இந்த வகையில் அண்மைக் கால அவசிய மற்ற அழிவுகளுக்கு நாமெல்லோரும் ஏதாவது வழி செய்தேயாக வேண்டும்.

இந்நிலையில் — இன்றைய 'தேசிய நெருக்கடி' யான தமிழ் மக்களின் பிரச்னைக்குத் நிரந்தர தீர்வு காணும் பட்சத்தில் நாட்டின் ஏனைய பிரச்னைகள்தீரவும் அபிவிருத்தி ஏற்படவும் வழி ஏற்படும் என்பதைஉணர்ந்து இனப் பிரச்னை தீர்வுக்கான அவசியத்தை தமது உரையில் வலியுறுத்தியுள்ளார் நிதி அமைச்சர்.

''எமது இனப் பிரச்னைகளை உடனடியாகத் தீர்ப்போம், அந்தச் சாதனையை இலங்கை வரலாற்றில் பொன் எழுத்துக்களால் இடம் பெறச்செய்வோம்.

இதுவும் தமது அபிலாஷைகளில்ஒன்று என துலாம்பரமாக எடுத்துரைத்தார் றெனி.

ஆடிக்கலவரத்தின் கொடூரத்தை — சமூக, பொருளாதார, பாதிப்பை கருத்தில் கொண்ட நிதி அமைச்சர், அவ்வாறுன கலவரம் ஒன்று மீண்டும் இடம் பெற அனுமதிக்கக்கூடாது என நாம் எல்லோரும் உறுதி பூணவேண்டும் என்பதையும் வலியுறுத்தியுள்ளார்.

கலவரம் காரணமாக உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இழந்துவிட்ட நம்பிக்கையை மீண்டும் பெறவேண்டியது தீர்க்கமானதும் அவசியமானதும் ஆகின்றது என்பதையும்

வாழ்க்கைச்செலவு ஜெட் வேகத்தில் அதிகரித்துவரும் இவ்வேளையில் இதனுல் அவதியுறும் மக்களுக்கு நிலைமையைச் சமாளிக்கும்வகையில் சிறு சம்பள உயர்வாவது கிடைக்குமென எதிர்பார்த்திருந்த வேளையில், தனியார் துறை, அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தில் ஒரு வீத வெட்டு விழுந்திருக்கிறது. அத்துடன் தனியார்துறையைச் சேர்ந்த வருமான வரி செலுத்தும் ஊழியருக்கு வரியில் வருடாந்தம் 10 வீத அதிகரிப்பு. இவ்வகையில் சில தனியார்துறை ஊழியருக்கு இரட்டை இழப்பு.

பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வுக்காக வசூலிக்கப்படும் இந்த ஒரு வீத புனர்வாழ்வு வரியையும், வருமான வரியில் 10 வீத மேலதிகக் கட்டணத்தையும் பாதிக்கப்பட்ட மக்களிடமிருந்தும் வசூலிக்க வேண்டிய நிலை, அந்த மக்களின் துரதிர்ஷ்டமே.

பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த வரிச்சலுகை இருப்பதாக இதுவரை அறிவிக்கப்படவில்லை

விலைகள் அதிகரிப்பு, கட்டணங்கள் அதிகரிக்கப்படுவதற்கு ஏதாவது காரணங்கள் கூறியாகவேண்டுமே.

அந்தக் காரணங்களில் வேடிக்கையான நொண்டிச்சாட்டுக்களுக்கு அரசியல்வாதிகளிடம் என்றுமே பஞ்சம்இருந்ததில்லை.

தபால், தொலைபேசிக் கட்டண அதிகரிப்புக்கு அவர் தரும் விளக்கம் இது—

எமது அண்டை நாடுகளில் அமுலிலிருக்கும் தபால் கட்டணங்களைவிட எமது கட்டணங்கள் மிகவும் குறைவானதே—

இலங்கையில் சாதாரண உள்ளூர்க் கடிதங்களுக்கு தபால் கட்டணம் 50 சதமாக இருக்கும்போது இந்தியாவில் உள்ளூர்க் கடிதங்களுக்கு முத்திரைக் கட்டணம் 1.20 சதம். (இலங்கை ரூபா)

பாண், சீனி, மா, பெட்ரோல் ஆகியபொருட்கள் விலையேறிய போதெல்லாம் சிங்கப்பூரிலோ வேறொரு பணக்கார நாட்டிலோ அமுலிலிருக்கும் இப்பொருட்களின் விலையை இலங்கை ரூபாவிற்கு மாற்றி அதன்மூலம்வரும் பெருந் தொகையை எமதுநாட்டு விலையுடன் ஒப்பிட்டு விளம்பரம்

டுப்பாடு நீங்கியபோது

''ஈழத்து இலக்கியங்கள், படைப்புக்கள் 'மெல்ல இனிச் சாகும்' என உள்ளூர் படைப்பாளிகள் பலர் கூறினுர்கள். அவ்வாறுனுல்—

இனிமேல் ஈழத்துப் படைப்புக்கள் 'விரைவில் இனிச் சாகும்' என்று கூறவேண்டிய நிலை.

கடந்த புதனன்று சபை'பட்ஜட்' உரைக்காக வழமையான நாட்களைவிட 1 மணித்தியாலயம் முன்னதாக 2மணிக்கு கூடி 7 நிமிடங்களில் ஆரம்ப நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

அடுத்த நிகழ்ச்சியான 'பட்ஜட்' உரைக்கு சபை தயாராகிவிட்டது

அன்றைய நாயகன் றெனி சபைக்கு வந்துசேரவில்லை.

1 நிமிடம்,

2 நிமிடங்கள் கழிந்துவிட்டன

இதனிடையே சபையில் சிறுபரபரப்பு பத்திரிகையாளர்கள் உஷாரானுர்கள்.

எல்லோர் கண்களும் அமைச்சர் உள்ளே நுழையும் கதவுகளை நோக்க—

நிதியமைச்சர் எங்கே? என்று சபாநாயகர் கேள்வி எழுப்ப—

அவர்வராவிட்டால் அடுத்த நிகழ்ச்சிக்குச் செல்வோம் என அத்தனகல எம். பி. வேடிக்கையாகக் கேட்க—

'பட்ஜட்' பெட்டியுடனும் புன்முறுவலுடனும் றெனி உள்ளே நுழைகிறுர்.

'பட்ஜட்'டில் தான் ஆச்சரியம், அதிர்ச்சி பரபரப்பு எதுவும் கிடையாதே 'பட்ஜட்' உரையின் முன்பாவது ஏதாவது வழியில் சிறுபரபரப்பை ஏற்படுத்துவோம் என எண்ணித்தான் றெனி சற்று தாமதித்து வாந்திருக்கிறுர் போலும்.

என்.எம். இரவு 9-30 மணிக்குப் பின்னரும் 'பட்ஜட்' உரையை வாசித்து நிகழ்த்திய சாதனையை சேர் பிரட்மனின் சாதனையைமுறியடித்த கனவான்கள் போல் தாமும் முறியடிக்கப்போவதாக தேநீர் இடைவேளைக்குச் சென்றபோது கூறி எதிர்பார்ப்புக்களை அதிகரித்துவிட்டபோதிலும் தமது பச்சைத்தண்ணி 'பட்ஜட்' உரையை இரவு 7-24க்கு முடித்துவிட்டார்.

(7ம் பக்கம் பார்க்க)

## 1984ம் ஆண்டிற்கான பொருட்களையும், சேவைகளையும் வழங்குநர்களைப் பதிவுசெய்தல்

கீழ்க்காணும் பொருட்களையும், சேவைகளையும் வழங்குவதற்குக் காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலையுடன் தங்களைப் பதிவுசெய்துகொள்ள விரும்பும் யாழ். மாவட்டத்திலுள்ள உற்பத்தியாளர்கள், ஏஜண்டுகள், விநியோகஸ்தர்களிடமிருந்து 1984-ம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. அ. துணி வகைகள், ஆ. தோல் சாமான்கள்,
   இ. வீட்டுப் பொருட்கள், ஈ. சமையல் உபகரணங்களும் இதற்கான வெட்டுக்கருவிகளும்,
   உ. சவர்க்காரம், ஊ. நல்லெண்ணெய்.
2. அ. சுத்திகரிப்பு உபகரணங்கள்
   ஆ. முதல் உதவி உபகரணங்களும், மருந்து வகைகளும்
3. அ. பெயிண்டுகளும், பெயின்ற் வகைகளும்
   ஆ. துசு, வர்ணம் பூசும் கருவி (Brush)
   இ. சீல் குத்தும் கூட்டுப் பொருள்
   ஈ. நெருப்பு களிமண் (Fire Clay)
4. அ. கட்டிடப் பொருட்கள், சறளைக் கற்கள், ஆற்று மண், சிறு மண், நாகர்கோவில் மண் உட்பட
   ஆ. வேலியடைக்கும் பொருட்கள்
   இ. சுகாதார உபகரணங்கள்
   ஈ. கூரைப் பொருட்கள்
   உ. மரம் (காயா தடி, பனை மரம், சிலாகை, பலகை ஆகியன)
   ஊ. குழாயும், குழாய்ப் பொருத்துகளும்
5. அ. போல்ட், நட், வாஷர், றிவேட், ஆணி வகைகள்
   ஆ. பலப்படுத்தும் சாமான் (இரும்பு வகைகள் Reinforcements)
   இ. தகடுகள்
   ஈ. கட்டிட அமைப்புப் பொருட்கள் (H இரும்பு ஆங்கிள் இரும்பு)
6. அ மின்சார உபகரணங்கள்
   ஆ. மின்சாரக் கருவிகள் (குளிர் சாதனப் பெட்டி, விசிறி, குளிர்மையூட்டிகள்)
   இ. மின் தடைப் பொருள்
   ஈ. மின்சாரக் கம்பியும் வயரும்
   உ. பல்புகள்
7. அ. ரயர், ரியூப்
8. அ. உலோகச் சாமான்கள்
   ஆ. உலோக ஒட்டுச் சாமான்கள்
   இ. செம்பு, பித்தளைக் கம்பி
   ஈ. உலோக வெட்டுச் சாமான்கள்
   உ. பட்டடைப் பொருட்கள் (Wokrshop Tools)
9. அ. எழுது கருவி வகைகள், ஆ. கந்தோர் உபகரணங்கள், இ. தளபாடங்கள்
10. அ. இரசாயன, ஆய்வுகூடக் கருவிகள்
11. அ. மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள்
    ஆ. சைக்கிள் உதிரிப் பாகங்கள்
    இ. மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் உதிரிப்பாகங்கள்
12. அ. கயிறு, நூல் வகைகள்
    ஆ. தும்புத் தடிகள், ஈர்க்குக் கட்டுகள், நார்க் கடகங்கள்

**சேவைகள்:**

1. அச்சடித்தல்
2. டெயிலரிங் (பில்ர ரியூப் (Filter Tube) தைத்தல் உட்பட)
3. தட்டச்சு இயந்திரம், ரேனியோ இயந்திரம், கணக்கிடும் இயந்திரங்கள் ஆகியவை பழுது பார்த்தல், சேர்விஸ் பண்ணுதல்
4. மோட்டார் வாகனத்தின் சீற், கூடாரம் தைத்தல்
5. லொறி, உழவு இயந்திர (Tractor, Tipper) மூலப் பொருட்கள் ஏற்றி இறக்குதல் (Transport)
6. புளொக், றப்பர் முத்திரை, பிளாஸ்டிக் / பித்தளை வட்டங்கள்
7. பியுல் இன்யெக்ரேஸ் பழுதுபார்த்தல் (Repairs to fuel injectors)
8. மரம் - கையால் அரிதல், இயந்திர மூலம் அரிதல்
9. பனைமரம் தறித்து, பிளந்து சிலாகையாகவும், மரமாகவும் சீவுதல்

பதிவுசெய்துகொள்ள விரும்புபவர்கள் கீழ்க்காணும் விபரங்கள் அடங்கிய மனுக்கள்மூலம் விண்ணப்பம்செய்தல் வேண்டும்.

அ. விண்ணப்பதாரரின் பெயர், பதிவுசெய்யப்பட்ட விலாசம், தொலைபேசி இலக்கம்
ஆ. வழங்கக்கூடிய பொருட்களும், சேவைகளும்
இ. வியாபாரத்தில் தகைமை (தனி உரிமையாளர், பங்குதாரர் அல்லது கம்பெனி)
ஈ. வியாபாரப் பதிவு இலக்கம்
உ. வங்கியின் பெயர், வங்கிக் கணக்கின் இலக்கம்
ஊ. பொருட்களை / சேவைகளை கடனுக்கு விநியோகிக்க முடியுமா?

ஒன்றுக்கு மேற்பட்ட பொருட்களுக்கும் / சேவைகளுக்கும் பதிவுசெய்துகொள்ள விரும்புவோர் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக விண்ணப்பிக்கவேண்டும். கூட்டாக அனுப்ப விரும்பினுல் கீழ்க் குறிப்பிட்ட முறையைப் பின்பற்றி ஒரே தபால் உறையில் அனுப்புவதும் ஏற்றுக்கொள்ளப்படும்.

வழக்கமாய் மதிப்புக் குறிப்பீடு (Quatation) பதிவுசெய்யப்பட்ட வழக்குநர்களிடமிருந்தே கோரப்படும்.

ஆனுல் தெரிவுசெய்யப்பட்ட வழக்குநர்களிடமிருந்தோ அல்லது மற்றும் பதிவுசெய்யப்படாத வழக்குநர்களிடமிருந்தும் மதிப்புக்குறிப்பீடு கோரும் உரிமை இந்த ஸ்தாபனத்திற்கு உண்டு.

வழங்குநர்களும் / சேவையாளர்களும் குறிப்பிட்ட கால எல்லைக்குள் மதிப்புக்குறிப்பீட்டு வழங்கத்தவறின் அல்லது மதிப்பீட்டின்படி வழங்கல்கள்/சேவைகள் வழங்கத்தவறின் அல்லது பொருட்களின் குறிக்கப்பட்ட பிரமாணங்களுக்கு அமையவழங்கத்தவறின் அறிவித்தலின்றி வழங்குநர் பட்டியலிலிருந்து நீக்கப்படுவார்கள்.

இந்த நிறுவனம் பதிவுசெய்வதற்கான விண்ணப்பங்களைக் காரணம் காட்டாமல் ஏற்கவோ அல்லது நிராகரிப்பதற்கோ உரிமையுண்டு. பதிவுசெய்வதற்கான விண்ணப்பங்கள் பதிவுத்தபால் மூலம் 'வழங்குநர்களைப் பதிவுசெய்தல்-1984' எனத் தெளிவாகத் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டுக் கீழ்க் கையொப்பமிட்டுள்ளவருக்கு 1983 டிசம்பர் 10-ம் திகதிக்குமுன் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல்வேண்டும்.

விநியோக உத்தியோகத்தர்
காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை,
காங்கேசன்துறை. 10097

## கொடிகாமம் சந்தை குத்தகை; ரத்து செய்யாவிட்டால் ஜனவரி முதல் பகிஷ்கரிப்பு!

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் சந்தைக் குத்தகை ரத்துச்செய்யப்படாவிட்டால் யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை முன் டிசம்பர் மாதம் 12ம் தேதி ஆர்ப்பாட்டம் செய்வதென தென்மராட்சி கிழக்கிலுள்ள 30 பொதுஸ்தாபனங்கள் முடிவு செய்துள்ளன.

கொடிகாமம் அரசினர் திருநாவுக்கரசு மகாவித்தியாலய மண்டபத்தில் கொடிகாமம் இளைஞர் ஒன்றிய உதவி தலைவர் திரு. எஸ். பரமலிங்கம் தலைமையில் நேற்று முன் தினம் நடந்த கூட்டத்தில் மேற்கண்ட முடிவுஎடுக்கப்பட்டது.

அரச அதிபரால் இளைஞர் ஒன்றியத்திற்கு அனுப்பப்பட்ட கடிதம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. 1984ம் ஆண்டு சந்தைக்குத்தகை இதுவரை ரத்துச்செய்யாதது கவலை அளிப்பதாக உறுப்பினர்கள் தெரிவித்தார்கள்.

அரசாங்க அதிபரை சந்திப்பதற்கு ஒன்றியப்பிரதிநிதிகள் உட்பட, நாவற்காடு இளைஞர் சங்கத்தலைவர் ச. யோகராசா கச்சாய் கிராமோதயசபைத் தலைவர் திரு. வேலாயுதபிள்ளை, கொடிகாமம் கிராமோதய சபைத்தலைவர் ஐ சின்னையா, கொடிகாமம் கிராம அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. செ. கைலாயபிள்ளை ஆகியோர் அடங்கிய குழுஒன்றும் நியமிக்கப்பட்டது.

அரசாங்க அதிபரைசந்தித்த பின்னும் சந்தைக்குத்தகை ரத்துச் செய்யப்படாதவிடத்து 26-12-83ல் யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை முன்பாக ஆர்ப்பாட்டம் செய்வதென, கரப்பகம் கிராம அபிவிருத்திச் சபைதலைவர் திரு. நவரத்தினம் பிரேரிக்க எழுதுமட்டு.

(6-ம் பக்கம் பார்க்க

### வல்வெட்டித்துறை-நகராட்சிமன்றம்
## ஏலவிற்பனை அறிவித்தல்-1984

மரக்கறிச் சந்தை, மீன்சந்தைகள் 1984-01-01 தொடக்கம் 1984-12-31ந் திகதிவரைக்குமான காலப் பகுதிக்கு கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளவற்றை 1983-12-06 முற்பகல் 10-00 மணி தொடக்கம் பிற்பகல் 02-00 மணிவரை என்னுல் அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரால் பகிரங்க ஏலத்தில் குத்தகைக்கு கொடுக்கப்படும்.

அட்டவணை

| விபரம் | 1983ம் ஆண்டிற்கு ஏற்றுக்கொள்ளப் பட்ட குத்தகைத் தொகை | ஆரம்பக் கேள்வித் தொகை | ஏல விற்பனை இருப்பு வைப்பு |
|---|---|---|---|
| 1. மரக்கறிச் சந்தை வல்வெட்டித்துறை | 47,400/- | 52,140/- | 1000/- |
| 2. மீன் சந்தை வல்வெட்டித்துறை | 45,000/- | 49,500/- | 1000/- |
| 3. மீன் சந்தை தொண்டமானுறு | 7,500/- | 8,250/- | 250/- |

எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது கேள்விகள் அனைத்தையும் ஏற்கவோ நிராகரிக்கவோ நகராட்சிமன்ற செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

கேள்வி கேட்க விரும்புவோர் அட்டவணையிற்குறிப்பிட்ட பிரகாரம் உள்ள தொகைகளை 1983-12-2 பிற்பகல் 03-00 மணிக்கு பிந்தாமல் ஏல விற்பனை இருப்பு வைப்புப் பணமாக செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ளவேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

க. சுப்பிரமணியம்
செயலாளர்
நகராட்சிமன்றம், வல்வெட்டித்துறை.

நகராட்சிமன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை,
21-11-1983.
வே. சா. (10109)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

காரைநகர் விளானைச் சேர்ந்த காலஞ்சென்ற கனகசபை திருநாவுக்கரசுவின் மரணச் சொத்து விடயத்தில்.
-மரணமெய்தியவர்

இல.T. 3713

சிவா திருநாவுக்கரசு மகேசனின் தத்துவகாரராக சின்னத்தம்பி தம்பிராஜா விளானை, காரைநகர்.
-மனுதார்

1. சின்னத்தம்பி தம்பிராஜா பெண் மனேன்மணி, விளானை, காரைநகர்.
2. நாகலிங்கம் கணபதிப்பிள்ளை.
3. பெண் தவமணி, கர்ரைநகர் தற்போது நைஜீரியா.

-எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1983ம் ஆண்டு மார்கழி மாதம் 2ந்திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன கட்டளையாக்கப்படலாகாதுஎன்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.


நீதிமன்றக் கட்டளைப்படி.

(ஒப்பம்)
கு. குலசிங்கம்,
1983ம் ஆண்டு கார்த்திகை 18ம் திகதி.
(10022)

மீண்டும்! தொலைக்காட்சியில் சென்னை நிகழ்ச்சிகளைத் தெளிவாகக் கண்டுகளிக்க உத்தரவாதத்துடன் ஏரியல் அமைத்துக்கொள்ளவும், மங்கள வைபவங்களை வீடியோவில் படம் பிடித்துக்கொள்ளவும் நாடவேண்டியது

வீனஸ் 226/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

நியூவீனஸ் 79/1, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்



தேசிய கசரோகத் தடுப்புச் சபையின் கொடித்தினம் கிளிநொச்சியில் 21-ம் திகதி முதல் 26-ம் திகதிவரை கொண்டாடப்பட்டபோது முதலாவது கொடியைப் பிரஸ்தாப சங்கத்தின் தலைவரும், சமூகசேவையாளருமான சட்டத்தரணி வி. ரி. சிவலிங்கத்திடமிருந்து தொழிலதிபர் கலாறேடர்ஸ் உரிமையாளர் கே. விஜயநாதன் பெற்றுக் கொண்டபோது பிடிக்கப்பட்ட படம். சகோதரி எலிஸபெத் பேக்கர் மற்றும் கசரோகத் தடுப்புச் சங்க உறுப்பினர்களும் படத்தில் காணப்படுகின்றனர்.

படம்:- கே. வி. கே. திருலோகமூர்த்தி (கிளிநொச்சி நிருபர்)

# இன்றைய பலன்

**கார்த்திகை 12-ந் திகதி**
**திங்கட்கிழமை**
**(28-11-83)**

மேடம்: பிதாவழியில் இருந்து மகிழ்ச்சிகரமான செய்திக்கும் இடமுண்டு, தெய்வநம்பிக்கையில் அதிக ஆர்வம் பிறக்கும் புண்ணிய காரியங்களில் அதிக மனம் ஈபடும், நீண்டநாள் பிரச்சனை நிவர்த்தியாகும்.

இடபம்; இதயத்தில் ஏக்கம் தணியும், தேடிய பொருள் காலடியில் சரணடையும், பரோபகார சிந்தை மேலிடும், நண்பர் ஒருவருக்கு கை கொடுத்து உதவுவீர்கள், செல்வாக்குப் பெருகும்,

மிதுனம்: ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த விஷயமொன்று உங்களுக்குச் சாதகமான முடிவைத் தரும், செல்வாக்குப் படைத்தவர்களின் ஆதரவுடன் வசதிகளும் பெருகும்.

கடகம்: எதிர்பார்த்தவகையில் பொருள் விரயமாகும், வியாபாரத் துறையில் பிணக்குகள் தோன்றி மறையும், சிந்தையில் குழப்பநிலை உண்டாகும், மனைவியின் உடல்நலம் சிறிது பாதிக்கப்படலாம்.

சிங்கம்: அன்னிய சகவாசம் அமைதிக்குஉலைவைக்கும், அபாயகரமான காரியங்களில் ஈடுபடுபவர்கள் மிகவும் அவதானத்துடன் நடந்து கொள்ளவும், வேண்டாத உலவுமுறைகளைத் தவிர்க்கவும்.

கன்னி: ஒளிமயமானதினம் கல்வித்துறையில் முன்னேற்றமுண்டு, ஆசிரியர்கள் பாராட்டப்படுவார்கள், இன்று ஏற்படும் புதிய திருப்புமுனை நிம்மதியை அளிக்கும், குடும்ப நலம் உண்டு.

துலாம்: தூக்கம் விழிகளைத் தழுவ மறுக்கும். கடந்தகால எண்ணங்கள் அலைமோதும். அடுத்துக்கெடுப்பதற்கு சிலர் முனைவர். சகோதரவழியால் சஞ்சலப்படக்கூடிய செய்திக்கு இடமுண்டு.

விருச்சிகம்: மதி நுட்பத்தின் மூலம் மற்றவர்களின் மனதைக் கவருவீர்கள். பயன் தரும்பிரயாணமொன்றும்மேற்கொள்ளப்படலாம். அறிஞர் ஒருவரின் சந்திப்பும் நிகழும்.

தனு: நேர்முகப் பரீட்சைக்கு உகந்த தினம். தெளிந்தமனம் தெய்வசிந்தை தேடியது கிடைக்கும். அமைதியுடன் ஆனந்த வாழ்வும் உண்டு. வெளியிடத்துப் பயணம் மேற்கொள்ளப்படலாம்.

மகரம்: தவறுகள் நடக்கும் நிலைமையும் தடுமாறும். நண்பர்களே காலை வாரிவிட முனைவர். துன்பத்தின்நிழலாட்டம் உங்களைத் தொடரும். இன்று அதிக பேச்சைத் தவிர்க்கவும்.

கும்பம்: வாழ்க்கை இன்று மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். களத்திரவழியால் நன்மைகள் வந்துசேரும். நீண்டநாள் கனவு நினைவாக மாறலாம்.

மீனம்: வியாபாரத்துறையில் நஷ்டத்திற்கும் இடமுண்டு. தொழில்துறையில் தொல்லைகள் தோன்றும். அதிக பேச்சைத் தவிர்த்துக்கொள்ளவும். நிதானம் வேண்டும்.

சோதிடக் கலாநிதி
**திருமலை**
**க. வேலுப்பிள்ளை**

## கொடிகாமம்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)
வாள் மாதர்கிராம அபிவிருத்திச்சபை தலைவி செல்வி மகேஸ்வரி அனுமதித்த தீர்மானம் நிறைவேறியது.

1-1-84ல் இருந்துதொடர்ச்சியாக சந்தையை பகிஷ்கரிக்க வேண்டுமென கொடிகாமம் மாதர் கிராம அபிவிருத்திச் சபை தலைவி செல்வி வசந்தி யோகராசா பிரேரிக்க மிருசுவில் மாதர் அபிவிருத்திச்சபை தலைவி திருமதி மேரியோசேப் அனுமதித்த தீர்மானம் நிறைவேறியது.

பகிஷ்கரிப்பிற்குப் பின்னும் குத்தகை ரத்துச் செய்யப் படாதுவிட்டால் 5-1-84ல் வரியற்ற மக்கள் சந்தை ஒன்றை ஆரம்பிப்பது எனவும் சபை தீர்மானித்தது. (க)



அங்கும்... இங்கும்... எங்கும்...





சிங்கர்

சவாரிக்குச் சிறந்ததோர் பைசிக்கிள் சிங்கர்

உங்கள் பிரயாணம் எதுவாக இருந்தாலும் உற்ற வொரு நண்பன்.
நீடித்த பாவனையும் தரமும் கொண்ட சிங்கர் பைசிக்கிள்.
கரடு முரடான பாதையா கல்லும் குழியும் நிறைந்த தெருவா,
சதுப்பு நிலமா, வைரமே உருவான வீதியா உறுதியான
உதிரிப்பாகங்கள் கொண்ட சிங்கர் பைசிக்கிள் ஒய்யாரமாகவே ஓடும்.
விலை ரூபா - 1390/- (வரிகள் தனி)
சிங்கர் இலகு தவணைக் கட்டணமுறை, வாங்குவதற்கு ஒரு சிறந்த வழி.

SINGER BICYCLES

சிங்கர் (ஸ்ரீ லங்கா) லிமிட்டெட்.

* Registered Trade Mark of the SINGER Company




பிராந்தியங்களுக்கிடையில் ''கிளாஸ்கோ'' சிலோன் லிமிட் நிறுவனம் நடாத்திய விற்பனை முகவர்களுக்கிடையிலான போட்டியின் பரிசளிப்பு வைபவம், யாழ்ப்பாணம் அசோக் ஹோட்டலில் நடைபெற்றபோது பிடிக்கப்பட்ட படங்கள். கம்பெனி நிர்வாக அதிபர் திரு. ஏ. பியாசாட் உரையாற்றுவதையும், கிளாஸ்கோ நிறுவன ஊழியர்கள்-பரிசுபெற்றோருடன் திரு. பியாசாட் நிற்பதையும் காணலாம். (படம்: தேவா)

## நூல் வெளியீடு

நூல்: பாரத இதிகாசத்தில் வரும் கதாபாத்திரங்களின் குணவியல்பு (க. பொ. த. ப. வகுப்புக்குரியது).

வெளியீடு; தமிழ் வளர்ச்சிக் கழகம், காரைநகர்.

விலை: ரூபா 4-00

காவியங்களையும் இதிகாசங்களையும் படைக்கும்புலவர்கள், தமது படைப்புக்களில் வரும் கதாபாத்திரங்களின் கருத்துக்களை மிக மிக அழகாக வருணிப்பார்கள். இக்கருத்துக்கள் வாசகர்கள் மனதில் ஒரு தாக்கத்தை உண்டாக்க வல்லன. இத்தாக்கம் சமுதாயத்தில் ஒரு முக்கிய திருப்பத்தை ஏற்படுத்தவுங்கூடும்.

கதாபாத்திரங்களின்கருத்துக்களையும் சூழ்நிலைகளையும் அடிப்படையாக வைத்து, அப்பாத்திரங்களின் குணவியல்புகளை அறிஞர்கள் பலர் ஆராய்ந்து நூல்கள் எழுதியுள்ளார்கள். ஆராய்ந்து கண்ட முடிவுகள் மாறுபட்டவையாகஇருப்பதையும் நாம் மறப்பதற்கில்லை.

விபீஷணன் இராமனுடன் சேர்ந்தது சரிதானா. தருமன் எல்லைமீறிப் பொறுமையைக் கடைப்பிடித்தமை ஏற்கக் கூடியதா என்பன போன்ற விஷயங்களில் இன்னும் திட்டமான ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை.

கதாபாத்திரங்களின் குணவியல்புகளை. ஆராயும் மனப் மனப்பாங்கு மாணவப் பருவத்திலேயே முளை கொள்ளவேண்டுமென்பது உளநூலறிஞர் முடிபு இம்முடிவை ஏற்ற கல்வித் திணைக்களத்தினர், க. பொ. த. ப [சாதர] வகுப்பு மாணவர்களுக்குப் பாரதச் சுருக்கத்தை ஒருபாடநூலாக வைத்து, அந்நூலில் வரும் கதாபாத்திரங்களின் குணவியல்புபற்றிய ஒரு வினவையும் பரீட்சை வினத்தாளில் இடம்பெறச் செய்திருக்கிறார்கள். இந்த வினவுக்குவிடை எழுதக்கூடியதாக, மாணவர் சிந்தனையைத் தூண்டக்கூடிய வகையில் எழுதப்பட்டதேஷி நூலாகும் இந்நாட்டில் தருமன் முதலாக பீஷ்மர் ஈறுயுள்ள பதினைந்து பாத்திரங்களின் குணவியல்புகள் வெவ்வேறு பல தலைப்புக்களின்கீழ் காய்தல், உவத்தலின்றி மிக நுணுக்கமாக ஆராய்ந்து எழுதப்பட்டுள்ளன. அடுத்தமாதம் நடைபெறவிருக்கும் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு இந்நூல் ஊட்டம்தரும் ஊசி மருந்து போன்றது என்றால் அது மிகையாகாது.

(இலக்கிய ரசிகர்களுக்கு இந்நூல் ஒரு நல்விருந்து)

'—பாரதி'

## "சிறுவர்களுக்கு நன்றிமறவாமையை போதிப்பது அவசியம்!"
### வண. செல்வராசா அடிகள்

(கல்வியங்காடு)

''நன்றிமறவாமை பற்றி குறிப்பாக சிறுவர்களுக்குப் போதிப்பது மிகவும் அவசியம். இதன் மூலம் சிறுவயது முதல் ஒருவரை ஒருவர் நேசித்தல், கருணைகொள்ளல், நன்றி கொள்ளல் போன்ற பண்புகள் ஏற்பட சந்தர்ப்பம் ஏற்படுகிறது''

இவ்வாறு முன்னாள் யாழ். பேராலய பங்குத்தந்தையும், யாழ். ஆயரின் செயலாளருமான வண. செல்வராசா அடிகள் குறிப்பிட்டார். நல்லூர் சென் பெனடிக்ற் சிறுவர் பாடசாலையின் சிறுவர்தினம் கடந்த வாரம் 'உலக நன்றி தினத்தில்' கொண்டாடப்பட்டது. அக்கொண்டாட்டத்தில் பங்கு கொண்டு பேசுகையிலேயே வண. செல்வராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது: ''உலக நாடுகளின் நன்றித்தினக்' கொண்டாட்டங்களில் இச்சிறுவர் தினம் கொண்டாடப்படுவது மகிழ்ச்சி தருகிறது. ஐரோப்பா, அமெரிக்காவில் இத்தினம் ஒரு விடுமுறைதினமாகும். நல்லொழுக்கங்களை பின்பற்ற இதுபோன்ற தினங்களை சிறுவர்கள் கொண்டாடவேண்டும்'' என்றார்.

மேற்படி பாடசாலை அதிபர் சகோதரி ஸ்ரனிலஸ்மேரி சிறுவர்தினக் கொண்டாட்டங்களை சிறப்பாக ஒழுங்குசெய்திருந்தார். நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சிவநாயகமூர்த்தியும் இவ்வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றினார். (கி)

## கிளிநொச்சி குருகுலம் முகாமில் மலையக அகதி தாக்கப்பட்டார்

(கிளிநொச்சி நிருபர் திருலோகமூர்த்தி)

கிளிநொச்சி குருகுலம் அகதி முகாமில் அகதியொருவர் சமூகசேவைப் பகுதி அதிகாரி ஒருவரினாலும், விசேட சேவை உத்தியோகத்தர்களினாலும் தாக்கப்பட்டு ஆபத்தான நிலையில் கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மலையகத்தைச் சேர்ந்த முத்தையா நாகராசா என்பவரே தாக்கப்பட்ட அகதியாவார்

குருகுல அகதிமுகாமில் சில ஊழல் நடவடிக்கைகள் இடம்பெற்றதாகவும், இதுகுறித்து சம்பந்தப்பட்ட அகதி, முகாம் நிர்வாகிகளுக்குப் புகார்செய்த காரணத்தினால் இந்த உத்தியோகத்தர்கள் மேற்படி அகதியைத் தாக்கியதாக நம்பப்படுகிறது.

சம்பவதினம் மேற்படி உத்தியோகத்தர்கள் ஜீப்பில் வந்ததாகவும், இவர்கள் அகதியை அழைத்துச் சென்று அவரின் நெஞ்சில் பலமாகத் தாக்கியுள்ளார்கள்.

இதுசம்பந்தமாகக் கிளிநொச்சிப் பொலிஸில் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து பொன். நித்தியானந்தன், யோகேந்திரன், சவுந்தரநாயகம், சிவலிங்கம், ரவி ஆகிய ஐவரையும் கிளிநொச்சிப் பொலிசார் தேடிவருகின்றார்கள். இதுகுறித்து முகாம்நிர்வாகிகள் யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா, அத்தியாவசிய சேவைக்ள் ஆணையாளர்நாயகம் திரு. பிரட்மன் வீரக்கோன், கிராமியத் தொழிற்துறை அமைச்சர் திரு. எஸ். தொண்டமான், திரு. எம். எஸ். செல்லச்சாமி ஆகியோருக்கு தந்தியொன்றினை அனுப்பியுள்ளனர். [சூ]

## நூல் பட்டியல் கையளிப்பு

[சுழிபுரம்]

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை சுழிபுரம் உப-அலுவலக நூல் நிலையத்திற்கு ஒதுக்கப்பட்ட இரண்டாயிரத்துஐநூறு ரூபா பெறுமதியான நூல்களை தெரிவு செய்ய நியமிக்கப்பட்ட குழுவினர் நூல்பட்டியலை சுழிபுரம் உப அலுவலக மேற்பார்வை அதிகாரி திரு எஸ். தங்கராசாவிடம் கையளித்துள்ளனர்.

கதிர்காமம்இந்துயாத்திரீகர் மடம்:

## அபிவிருத்தி வேலைகள் தற்போதில்லை

(கொழும்பு)

25 லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்படவிருந்த கதிர்காமம் இந்து யாத்திரீகர் மட அபிவிருத்தி வேலைகள் தற்போதைக்கு நடைபெற மாட்டாது.

இதற்கென ஒதுக்கப்பட்ட நிதி மட்டக்களப்பு மண்முனைப் பாலம் அமைப்பதற்கும் தாம்போதி வேலைகளுக்கும் செலவிடப்படும்.

யாத்திரீகர் மடத்துக்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதியை மாற்றியமைப்பதற்கான குறைநிரப்பு மதிப்பீடு பிரதேச அபிவிருத்தி அமைச்சர் செ. இராசதுரையால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

மண்முனைப் பால வேலைகளுக்கு இதுவரை 15 லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இந்த வேலைகள் முடியும்வரை பிராந்திய அபிவிருத்தி அமைச்சு வருடந்தோறும் 50 லட்சம் ரூபாவை ஒதுக்கும் என்றும் அந்தப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-கு)

## 'நவீல்ட்' நத்தார் இசை ஆராதனை

(கல்வியங்காடு)

கைதடி கட்புல, செவிப்புலனிழந்தோர் பாடசாலை நவீல்ட்) மாணவர்களது வருடாந்த நத்தார் இசை ஆராதனை யாழ். றிம்மர் மண்டபத்தில் டிசம்பர் மாதம் 3ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் நடைபெறும். பலவித கலைஅம்சங்களுடனான இந்நிகழ்ச்சியில் மேற்படி பாடசாலையின் மாணவர்கள் பலர் கலந்துகொள்கிறார்கள்.

## ஆடிக் கலவரம்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)


மொத்தத்தில் இன்றைய தேசிய நெருக்கடியில் நிதி அமைச்சர் ரொனி டி மெல்லும் சிக்கித் தவித்திருக்கிறார் என்பதை இந்த 'பட்ஜட்' எடுத்துக் கூறுகிறது

## கூட்டம்

[சுழிபுரம்]

பொலிஸ்-பொதுமக்கள் நல்லுறவுச் சங்கத்தின் காங்கேசன்துறை பிரிவுக்கான பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடேஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கிராமசேவையாளர் பிரிவுதோறும் விழிப்புக்குழு தெரிவு செய்தல், சமாதான குழுக்களைத் தெரிவுசெய்தல், புதிய உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்தல் ஆகிய நிகழ்ச்சிகள் நிகழ்ச்சி நிரலில் இடம்பெற்றுள்ளன.



தாவடியில் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் புதிய பிரிவொன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. வடமாகாண சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் ஆணையாளர் டாக்டர் ஈ. ப. இராசையா அப்பிரிவை குத்துவிளக்கேற்றி ஆரம்பிப்பதை படத்தில் காணலாம். அருகில் புதியபிரிவின் அத்தியட்சகர் செல்வன் செ. மோகன்ராஜ், அத்தியட்சகர் செ. செல்வரஞ்சன் ஆகியோர் நிற்பதைக் காணலாம். (கி)


## யாழ். மக்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி

நீங்கள் வெளிநாடு செல்லவேண்டுமா?
உங்கள் பிரயாணச்சிட்டுக்களை இன்றே யாழ்நகரிலேயே பதிவு செய்துகொள்ள
நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்

குறேஸ் ட்ரவல் சேர்விசஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

கொலன்ட் வழியாக பிரான்ஸ் செல்வதற்கான சகல ஏற்பாடுகள்
மற்றும் பெல்ஜியம் விசாவுடன் பயணச்சீட்டுக்களை மிகக் குறைந்த
கட்டணத்தில் பெற உடனே நாடுங்கள்.

CROSS TRAVEL
SERVICES
(PTE) LTD.
STAGE II MODEL MARKET,
No. 5, 1st FLOOR,
BUS STAND CENTRE ROAD,
JAFFNA.
Phone No. 22065, 22040

★ பேளின் (BERLIN ரூபா 9,500/- ஒரு வழி பயணச்சீட்டு கனடா செல்வதற்கான ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்படும்.

# மன்னார் செய்திகள்

(மன்னார்)
சரித்திரப் பிரசித்திபெற்ற திருக்கேதிஸ்வரம் ஆலயத்தில் கார்த்திகைத் திருவிளக்குப் பூசை நடைபெற்றது. இதே போல் மன்னாரிலுள்ள சகல சைவ ஆலயங்களிலும் கார்த்திகைத் திருவிளக்குப் பூசை நடைபெற்றது.

## அதிபர்கள் கருத்தரங்கு

மன்னார் மாவட்டப் பாடசாலைகளின் அதிபர்கள், உதவி அதிபர்கள் ஆகியோருக்கான இரண்டு நாள் கருத்தரங்கு மன்னார் புனித. சவேரியார் பெண்கள் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது.

மன்னார் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் செல்வி பி. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் கொழும்பு கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த கணக்காளர் திரு. ராஜ் சுப்பிரமணியம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

## சிரமதானப் பணி

மன்னார் - அகத்திமுறிப்புக் கிராமோதய சபையினல் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான வேலை ஒன்று சிரமதானமூலம் செய்துமுடிக்கப்பட்டது.

இச்சிரமதானத்தின் மூலம் பொற்கேணி அரசினர் பாடசாலையைச் சுற்றியுள்ள 2 ஏக்கர் காணிக்கு வேலி அமைக்கப்பட்டது. தலைவர் ஜனுப் எஸ். மீராசாகிபு தலைமையில் நடைபெற்ற இச்சிரமதானப் பணியில் கிராமோதய சபை உறுப்பினர்களும், பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

## விதைகள் கையிருப்பு

மன்னார் மாவட்ட விவசாயிகளுக்குத்தேவையான நெல், மற்றும் உப உணவு உற்பத்திக்குத் தேவையான விதைகள் யாவும் போதியளவு கையிருப்பில் உண்டு என்று மன்னார் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் ஜனுப் எம். சி. எம். முஸ்தபா தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட விவசாயிகள் தமக்குத் தேவையான விதைகளை எந்தநேரத்திலும் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

## சூதாட்டத்தைக் கைவிட்டனர்

தலைமன்னார் பகுதியில் பொது இடங்களிலும், மரநிழல்களிலும் சூதாட்டத்தில் ஈடுபட்டோர் தமது சூதாட்ட தொழிலை முற்றாகக் கைவிட்டனர்

தலைமன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. கே அரசரத்தினம் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பயனு° சூதாட்டக்காரர் தமதுசூதாட்டத் தொழிலை முற்றாகக் கைவிட்டனர்.

## உணவு வழங்கப்படவில்லை

மன்னார் அரசினர் ஆதார வைத்தியசாலையின் உணவுக்குப் பொறுப்பான அதிகாரி விடுமுறையில் சென்றதால் இவ்வைத்தியசாலையில்சிகிச்சை பெற்றுவரும் நோயாளிக்கு இரண்டு நாட்கள் உணவு வழங்கப்படவில்லை.

கடந்த சனி, ஞாயிறு ஆகிய தினங்களிலேயே நோயாளர்களுக்கு உணவு வழங்கப்படவில்லை. உணவுக்குப் பொறுப்பான அதிகாரி விடுமுறையில் சென்றதற்கு மாற்று நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளாததாலேயே நோயாளிகளுக்கு உணவு வழங்கப்படவில்லை.

## நூலக வாரம்

[சாவகச்சேரி]
கைதடி - மேற்கு சரஸ்வதி கிராம அபிவிருத்திச் சங்கமும், மாதர் அபிவிருத்திச் சங்கமும் இணைந்து நூலக வாரம் ஒன்றினை அடுத்த மாத முற்பகுதியில் நடத்தவுள்ளது

இதற்கான ஏற்பாடுகளைக் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் வ சின்னத்தம்பியும், மாதர் அபிவிருத்திச் சங்கத் தலைவி திருமதி பூமணி சின்னத்துரையும் மேற்கொண்டிருக்கின்றனர்.

இந்நூலக வாரத்தின்மூலம் பெறப்படும் நூல்களால் நூலகம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு கிராம மக்களிடையே வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துவதே இந்நூலக வாரத்தின் நோக்கமெனத் தெரிவிக்கப்படுகிறது. [து]

## ரூபவாஹினியில் இன்று

மாலை

| | |
|---|---|
| 6.00 | இன்றையநிகழ்ச்சிகள் |
| 6.02 | 'கார்ட்டூன்' சித்திரம் |
| 6.30 | 'சிம்ப்மேட்ஸ்' (ஆங்கிலம்) |
| 6.45 | யூகோஸ்லாவிய தேசிய தினத்தைமுன்னிட்டுவிசேடநிகழ்ச்சி |
| 7.00 | செய்திகள் (தமிழ்) |
| 7 14 | நாளைய நிகழ்ச்சிகள் |
| 7 30 | யோகாசனப் பயிற்சிகள் |
| 7.45 | '240 ரொபொட்ஸ்' துப்பறியும் தொடர் சித்திரம் |
| 8.15 | செய்திகள் [சிங்களம்] |
| 8 30 | '240 ரொபெட்ஸ்' தொடர்ச்சி |
| 9.00 | 'லவ்போர்ட்' நகைச்சுவை காதல்சித்திரம் |
| 9.30 | செய்திகள்[ஆங்கிலம்] |
| 9.50 | 'லவ் போர்ட்' தொடர்ச்சி |

## வன்செயல் அகதிகளுக்கு சுப்பிரமுனிய சுவாமி உதவி!

[மாவிட்டபுரம்]
அண்மையில் நடந்த வன்செயல் சம்பவங்களால் பாதிக்கப்பட்ட 10 குடும்பங்களுக்கு நஷ்டஈடாக 50 ஆயிரம் ரூபாவை அளவெட்டி ஸ்ரீ சுப்பிரமுனியசுவாமிஆச்சிரமத்தினர் வழங்கியுள்ளனர்.

வன்செயல் சம்பவங்களால் பாதிக்கப்பட்ட பலர் தமக்கு உதவும்படிகோரி அமெரிக்காவில் உள்ள சிவாய ஸ்ரீ சுப்பிரமுனிய சுவாமிகளுக்கு விண்ணப்பித்திருந்தனர். இந்த விண்ணப்பங்களை ஆராய்ந்து உதவி செய்யும்படி சிவாய ஸ்ரீ சுப்பிரமுனிய சுவாமிகள் தம் இலங்கை கிளையாக விளங்கும் அளவெட்டி சுப்பிரமுனிய ஆச்சிரமத்தினரை வேண்டியிருந்தார்,

இதையடுத்து மேற்படி ஆச்சிரமத்தினர் அவர்களை அழைத்து விசாரணை செய்து 10 குடும்பங்களை தெரிவுசெய்து அவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாவை நஷ்டஈடாக வழங்கியுள்ளனர்.

மேற்படி குடும்பங்கள் மூன்று குடும்பங்கள் யாழ்ப்பாணத்தில் நடந்த வன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்கள் என்றும், 7குடும்பங்கள் வெளி மாவட்டங்களில் இருந்து பாதிக்கப்பட்டவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் பல உதவிகளை வழங்க தாம் திட்டமிட்டுள்ளதாக மேற்படி ஆச்சிரமத்தைச் சேர்ந்த டாக்டர் எஸ். சண்முக சுந்தரன், வே. கனகநாயகம் ஆகியோர் தெரிவித்தனர்,

## யாருடையது?

பருத்தித்துறை மக்கள் வங்கி சேமிப்புப் புத்தகமும், மற்றும் சிலபத்திரங்களும் யாழ். பூபால சிங்கம் புத்தகசாலை கவுண்டரில் கண்டு எடுத்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.





ZENITH

பிரகாசமான இயற்கை வர்ணங்களை அளித்து மகிழ்ச்சியை உண்டு பண்ணும் உன்னத டெலிவிஷன்களை அளிப்பது பிலிப்ஸ்

நம்பகரமான நீண்ட ஆயுள்கொண்ட பிலிப்ஸ் வர்ண டெலிவஷனின் சிறப்பம்சங்கள்

- உள்ளடக்கப்பட்ட வோல்டேஜ் சமநிலைமானி
- உஷ்ண மண்டல பிரதேசங்களுக்கு உகந்த உருவ அமைப்பு
- தன்னியக்க ஒலி, ஒலி கட்டுப்படுத்தும் சுழல் முறுக்கிகள்
- தெளிவான விம்பம்
- சக்தியுள்ள ஒலிகது விசேட டபிள்கோன் முறை ஒலி அமைப்பு
- VCR. வீடியோ விளையாட்டுக்கள் வீடியோ டிஸ்க் ஆகியவற்றிற்கான இணைப்புகள்

நீங்கள் பிலிப்ஸ் டெலிவிஷனை தேர்ந்தெடுக்கும்போது - நவின தொழில் நுட்ப வேலைப்பாடுகளுக்கமைய உருவாக்கப்பட்ட சிறந்த டெலிவிஷனை வாங்கிறோம் என்ற பெருமையை அடைவீர்கள்

இலங்கையில் ஏக விநியோகஸ்தர்கள்

HAYLEYS

**ஹேய்லீஸ் லிமிட்டெட்.**

சேவைப்பிரிவு: 25, பொஸ்ரர் ஒழுங்கை, கொழும்பு 10. தொலைபேசி: 91181-9
காட்சியறை: 646, காலி வீதி, கொழும்பு-3. தொலைபேசி: 86958
சுங்கவரி நீக்கப்பட்ட விற்பனை நிலையம், 2, சிழ்மாபு, கொழும்பு-3.

PHILIPS

நாம் பிலிப்ஸ் உடன் இணைந்து சிறந்ததையே வழங்குவோம்

இலகு தவணையில் செலுத்த ஒழுங்கு செய்யப்படும்

கலர் TV
14'' 287 டாலர் ரூபா 11,400/-
16'' 325 டாலர் ரூபா 12,500/-
20'' 400 டாலர் ரூபா 15,500/-
26'' 700 டாலர் ரூபா 22,000/-
உத்தரவாத காலங்கள்...

கறுப்பு/வெள்ளை TV
12'' 90 டாலர் ரூபா 2,975/-
14'' 112 டாலர் ரூபா 3,750/-
17'' 148 டாலர் ரூபா 5,800/-

ரெலிவிஷன் செற்ஸ் - 1 வருடம்

பிலிப்ஸ் VHS வீடியோ கஸெற் றெக்கோடர் 420 டாலர் 'TC'

காட்சிக் குழல்-3 வருடங்கள்

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி-K. R. விஜயா
கிரஹப் பிரவேசம்
(கலர்)
அடுத்தது
என் கடமை

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-15, 1-15, 4-15, 7-15
கமல்-ஸ்ரீதேவி
சில்க் சுமிதா
மூன்றும்பிறை
(வெள்ளிவிழா சித்திரம்)

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி—சரிதா
கீழ்வானம் சிவக்கும்
(ஈஸ்மன் கலர்)

**சாந்தி** (யாழ். நகர்)
10-30, 2-30, 6-30
மாதர் கூட்டம் திரளும்
8-வது வெற்றி வாரம்!
சிவாஜி-கே. ஆர். விஜயா
ஊரும் உறவும்
வண்ணத்திரை ஓவியம்

**வின்ஸர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
எம்-ஜி-ஆர், சரோஜாதேவி
நடித்த தேவரின்
தாயைக்காத்த
தனயன்
(புதிய பிரதி)
விரைவில்!
ஆனந்த ராகம்

**மனோகரா**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி — K. R. விஜயா
மாதவி, சுருளிராஜன்
ஸ்ரீபிரியா மற்றும் பலர்
நிறம்பட நடித்த
வர்ணப்படம்
சத்திய
சுந்தரம்

**றீகல்** (யாழ்நகர்)
இன்று முதல்
தினசரி: 10-30, 2-30, 6-00
ரஜனிகாந்த், ஸ்ரீப்பிரியா
சுமன், சௌகார் நடிக்கும்
தீ
இந்தியாவிலிருந்து
தருவிக்கப்பட்ட
புத்தம்புதிய வண்ணப்பிரதி

வெகு விரைவில்
பயணங்கள்
முடிவதில்லை

**லிடோ** (யாழ். நகர்)
தினசரி
27-11-83 வரை
நீர்க்குமிழி
வருகிறது
நீதிபதி

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
எம். ஜீ. ஆர்
சரோஜாதேவி
பணத்தோட்டம்
வெகுவிரைவில்
கார்த்திக் நடித்த
காற்றினிலே வரும்

இன்று மட்டும்
**Rajah** JAFFNA
Daily 10-30, 2-00, 4-30
7-00 and 9-30
**The Fighters**
(Color) (Adults only)
30-11-83 முதல்
BATTLE CREEK
BRAWL
கராட்டி படம்


வடபகுதியில் உற்பத்திசெய்யப்படும்

# கால்நடை உணவுகள் தரம் குறைந்துள்ளதாகப் புகார்

[கரவெட்டி]

வடபகுதியில் தற்பொழுது உற்பத்தி செய்யப்படும் கால் நடை உணவு வகைகள் தரம் குறைந்துள்ளதாகப் புகார் தெரிவிக்கப்படுகிது. இதனுல் அண்மைக் காலமாக வடக்கில் கோழிமுட்டை, பால் உற்பத்தி வீதம் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதியில் தற்பொழுது பரவலான முறையில் கோழித்தீன், மாட்டுத்தீன் என்பன தயாரிக்கப்படுவதால் இவற்றை வாங்குபவர்கள் எச்சரிக்கையாக இருக்குமாறும் கால்நடை வைத்திய நிபுணர் ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

இத்தரம் குறைவுபற்றி பரிசீலனைசெய்து நடவடிக்கை எடுக்கக்கோரி விவசாய அமைச்சர், கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் ஆகியோருக்கு மகஜர் ஒன்றை அனுப்புவதற்கு இப்பகுதிக் கால்நடை வளர்ப்போர் முயற்சி செய்து வருகின்றனர்.


வருடமொன்றுக்கு உங்கள் பணத்துக்கு
**26%** தொடக்கம் **30%** வரை
வட்டி பெற்றுக்கொள்ளுங்கள்.
குறைந்த தொகை ரூபாய் 1000/-
எந்நேரமும் அறிவித்தலின் பின் முழுப்பணத்தையும் திருப்பிப் பெறலாம்.
விபரங்களுக்கு:
JAFFNA PROPERTY TRADES LTD.
3, நவீன சந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.
போன்: 23698

இலங்கைப் பல்கலைக் கழக
வெளிநிலைப் பாடநெறிகள்
பாடநெறி - சட்டம் (L. L. B.)
(தமிழ் மொழி மூலம்)
விரிவுரைகள் 01-01-1984இல் ஆரம்பமாகின்றன.
க. பொ. த. உயர்தரம் அல்லது வேறு உயர் தகமையுடையோர் விண்ணப்பிக்கலாம்.
பதிவாளர்
JAFFNA LAW ACADEMY
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
10161

SONY அல்லது NATIONAL
தொலைக்காட்சிப் பெட்டி
இரண்டு வருட இலகுவான தவணை முறையில் நீங்கள் தொலைக்காட்சிப் பெட்டிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
உடன் பணம் செலுத்துபவர்கட்கு எம்மிடம் கூடுதலான கழிவு வழங்கப்படும்.
தொடர்பு கொள்ளவும்.
Shabra Unico Finance Limited,
207, POWER HOUSE ROAD, JAFFNA.
Tel. 22073


## 4-வது மாத நினைவஞ்சலி




சி. பரமசாமி — ப. அருணன்

தோற்றம்: 17-10-1931 — 24 5-1959

மறைவு: 25-7-1983

மானுடத்தின் நாகரீகம் மகிமை இழந்த
மாநிலத்தின் நாற்றிசையும் காறி உமிழ்ந்த
ஆடிப் படுகொலையில்
வீறுடனே வெகுண்டெழுந்த வீரபுருஷர்
குடும்பமலர்த் தோட்டத்தில் இரண்டுபூக்கள்
சரிந்த கதை சரித்திரத்தின் சுவடுதானே.

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
குடும்பத்தினரும், உறவினர்களும், நண்பர்களும்

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். 10117

இரண்டாவது ஆண்டு

## நினைவஞ்சலி

### திருமதி மாதவராசா சந்திரலேகா



தோற்றம்: 15-6-1953
மறைவு: 28-11-1981

எங்கள் அன்பின் சோதியோ அருள் விளக்கோ நீ அணைந்தாலும் நின் அன்பு விளக்கு என்றும் எம் இதயத்தில் எரிந்து கொண்டிருக்கும். உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

கணவன், உற்றார், உறவினர்,
மாதவராசா குடும்பத்தினர்

சந்நிதி கோவில், தொண்டமானாறு. 10183

## அந்தியேட்டி அழைப்பு

### "கனகேஸ்வரி மயில்வாகனம்"



31-10-83ல் சிவபதம் அடைந்த கனகேஸ்வரி மயில்வாகனத்தின் மரணச்சடங்கில் பங்குபற்றியோர்க்கும், அனுதாபச் செய்தி அனுப்பியோர்க்கும், உதவி ஒத்தாசை புரிந்தோர்க்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, 30-11-83 ந் திகதி புதன்கிழமை அதிகாலை 6-00 மணியளவில் கீரிமலையிலும், அன்றுமத்தியானம் இல்லத்திலும் நடைபெறவுள்ள அன்னரது அந்தியேட்டி கிரியையிலும் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சின்னத்துரை மயில்வாகனம்
"COURT OFFICER"
(நீதிமன்றம், மல்லாகம்)
ஏழாலை கிழக்கு,
சுன்னாகம். 10189


வெளிநாடு செல்கிறீர்களா?
உங்கள் விமான பயணச் சீட்டுக்களை எந்தவித சிரமமின்றி யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ளுங்கள்.
விபரங்கட்கு:-
TFC
த பிறவுன்ஸ் கம்பனி லிமிட்டெட்
249, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 23680
COLOMBO STUDIO

பிரயாணச் சீட்டுக்களை
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

# திருமலை ஆசிரியர்கள் திரும்பிச்செல்ல முடிவு!

(திருக்கோணமலை)

இடம்பெயர்ந்த ஆண் ஆசிரியர்கள் பழைய பாடசாலைகளில் கடமையாற்றுவதற்காக அடுத்த வாரத்தில் அங்கு திரும்பிச் செல்வதென முடிவு செய்துள்ளனர்.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தினுல் இடம்பெயர்ந்த ஆசிரியர்களின் பிரச்னைபற்றி ஆராய்வதற்காக நேற்று திருக்கோணமலை இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்திற்கு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் திருக்கோணமலை மாவட்ட செயலாளர் திரு. க. குணராசா தலைமை வகித்தார். இக் இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

'இடம் பெயர்ந்த பெண் ஆசிரியர்கள் தற்போதைக்கு பழைய பாடசாலைகளுக்கு திரும்பிச் செல்வதில்லை. இவர்கள் பற்றி ஆசிரியர் சங்க தூதுக்குழு மீண்டும் கல்வியமைச்சரைச் சந்தித்து முடிவெடுக்கும்வரை பொறுத்திருப்பது:

'அடுத்த வருடம் முதலாம் தவணை ஆரம்பிப்பதற்கிடையில் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் தனிப்பட்ட விண்ணப்பங்களை பரிசீலித்து அவர்களுக்கு நியாயமான தீர்வுகளை வழங்க கல்வி அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

'திருக்கோணமலை மாவட்டத்தில் 1200 ஆசிரியர்களுக்கு வெற்றிடங்கள் உள்ளதால் இடம் பெயர்ந்த 29 ஆசிரியர்களுக்கும் இம்மாவட்டத்தில் இடமாற்றம் வழங்க வேண்டும்.'' (வெ-கு)

## இன்று திட்டி கொலை வழக்கு

(யாழ்ப்பாணம்)

திட்டிகொலைவழக்கு யாழ். நீதிமன்றத்தில் நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு இன்று காலைவரை ஒத்திப்போடப்பட்டது.

இவ்வழக்கில் திட்டியைச் சேர்ந்த சீமான் துரைமணி, சீமான் தவராஜா, அந்தோனி சொயிஸா ஆகியோர் குருநகரைச்சேர்ந்த ஆசைராசா அல்லது ஆசைமணி என்பவரை கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

## இடம்பெயர்ந்த...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்துக்கொண்டு இவ்வார இறுதியில் பாதிக்கப்பட்ட 500 ஆண் ஆசிரியர்களும் பழைய இடங்களுக்குச் செல்ல வேண்டும். பழைய பாடசாலைகளுக்குச் சென்றதும் அங்கு அக்டோபர், நவம்பர் மாத சம்பளத்தைப் பெறலாம். டிசம்பர், ஜனவரி மாத சம்பளத்தைப் பெறுவதற்கான ஏற்பாட்டையும் அவர்கள் செய்யலாம். வருட இறுதி தவணைப் பரீட்சையை நடத்திவிட்டு டிசம்பர் 16 ம்தேதி இங்கு வந்துவிடலாம், இது ஒன்றை நீங்கள் செய்வதன் மூலம், நமது மற்றைய கோரிக்கைகள் யாவும் வெற்றியளிக்க வாய்ப்பு ஏற்படும்.'

பெண் ஆசிரியைகள் பழைய இடங்களுக்குச் செல்ல தேவையில்லை. அவர்களின் அக்டோபர், நவம்பர் மாத சம்பளம் அடுத்த கட்ட பேச்சுவார்த்தையில் முடிவு செய்யப்படும். பெண்கள் ஜனவரிவரைபழைய இடங்களுக்குச் செல்ல தேவையில்லை.

பழைய இடங்களுக்கு செல்ல பாதுகாப்புஇல்லைஎன்றுகருதும் ஆண் ஆசிரியர்கள் இன்றுகாலை 10 மணி முதல் 4 மணி வரை சங்கக் காரியாலயத்தில் தெரிவிக்கலாம். இவர்களுக்கு பெண் ஆசிரியர்களுக்குஅளிக்கப்பட்ட சலுகைகள் கிடைக்கும்.

கணவனும், மனைவியும் ஆசிரியர்களாக உள்ளவர்கள், உணவுப் பிரச்னை காரணமாக பெண் ஆசிரியையும் செல்ல விரும்பினுல் 750 ரூபா முற்பணம் எடுக்கலாம். அந்தப் பெண் ஆசிரியையும் பழைய பாடசாலையில் அக்டோபர் நவம்பர்மாத சம்பளத்தைப் பெற்றுக்கொள்ளலாம். ஆண் ஆசிரியருக்கு வழங்கப்பட்டுள்ள சகல வசதிகளும் அந்த பெண் ஆசிரியைக்கும் கிடைக்கும்.

யாழ். கல்விக்கந்தோரில் முற்பணமாக 750ரூபா எடுத்து நேராக பழைய பாடசாலைக்கு செல்லுங்கள் பொறுப்பை ஏற்றதும் அக்டோபர் நவம்பர் மாதச்சம்பளத்தை பெறுங்கள் பாதுகாப்பு உண்டென்று உங்கள் மனச்சாட்சி கூறினுல் டிசம்பர் 16ம் திகதி வரை அங்கு இருங்கள். டிசம்பர் ஜனவரி சம்பளத்தைபெறஏற்பாடு செய்யுங்கள். பாதுகாப்பு இல்லையென்று உங்கள்மனச்சாட்சி கூறினுல் அடுத்த நிமிடமே திரும்பிவிடலாம். டிசம்பர் 16ம் திகதி வரை உங்கள் சொந்தலீவில் இங்குவந்து நிற்கலாம். பழைய இடங்களுக்கு செல்லாதவர்கள் 750ரூபா முற்பணம் எடுக்க கூடாது. முற்பணம் எடுத்துவிட்டு பழைய பாடசாலைகளுக்கு செல்லாமல் விட்டால் கல்வி இலாகா நடவடிக்கை எடுக்கும். (க-கு)

## தமிழர்க்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

''அமெரிக்க அதிபர் றீகனின் மனப்பான்மைக்கு இது ஓர் உதாரணம், அவரை ஆதரவுக்கு அழைப்பவர்கள் பிறகு சிறிது மாறினுலும்' என்ன நடக்குமென்பதற்கு இந்த நிகழ்ச்சி ஒரு முன்னோடி விளக்கம்.

''அமெரிக்க உதவியை அழைத்துக்கொண்டு வந்து உள்ளே புகவிட்டு விட்டால் நாடே பறிபோய்விடும். சம அந்தஸ்து மட்டும் கேட்கும் இலங்கைத்தமிழர்களுக்குவாழ் வளித்தால் சிங்களவர்கள் மானத்துடன் வாழமுடியும்.'' இவ்வாறு அந்த தலையங்கம் குறிப்பிடப்பட்டுள்ளது.

(கெ-கு)

## மரண அறிவித்தல்

### திருமதி நாகம்மா முத்துக்குமாரு

இவர் காலம்சென்ற திரு. சி. முத்துக்குமாரு (உரிமையாளர் அடைவு பிடிப்பவர்) அவர்களின் அன்பு மனைவியும், திரு. கனகரெட்ணம் (உரிமையாளர் முத்துக்குமாரு அன் சன்ஸ்), திருமதி மகேஸ்வரி சயலொளிபவன், திரு. ஜெகதீசன் (உரிமையாளர் திசாரோய்ஸ்) அவர்களின் அன்புத் தாயாரும், திருமதி பராசக்தி, திரு. கா. சயலொளிபவன் (R. M. P.), திருமதி புஷ்பராணி அவர்களின் மாமியாருமாவார். அன்னுரது ஈமக்கிரியைகள் நாளை 29-11-83 காலை 9-00 மணியளவில் 10, வைரவ கோவில் வீதி வெள்ளாந்தெரு இல்லத்தில் நடைபெற்று தகனத்திற்காக வில்லூன்றி மயானம் எடுத்துச் செல்லப்படும். உறவினர்கள், நண்பர்கள், சுற்றத்தார் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பிள்ளைகள், மருமக்கள்.

10200

## மரண அறிவித்தல்

### திருமதி தனபாக்கியம் வெள்ளையன் செட்டியார் காலமாகிவிட்டார்

அன்னுர் மாத்தளை காலஞ்சென்ற வெள்ளையன் செட்டியாரின் அருமை மனைவியும், அமரசிங்கம் செட்டியார் (இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனம்), திருச்செல்வம் செட்டியார் J. P., ராஜேந்திரா செட்டியார் (ஸாம்பியா), மகேஸ்வரன் செட்டியார், இந்துமதி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற த. சுப்ரமணியம் செட்டியார், சே. சண்முகநாசன் செட்டியார், இந்திராணி, புவனேஸ்வரி, பூமதி, இந்திராதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னுரின் ஈமக்கிரியை 21, ஸ்ரான்லி வீதி இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக 28-11-83 திங்கட்கிழமை காலை 8 மணிக்கு வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

10203

## இந்திரா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தமாநாடு எதிர்வரும் 1-ம் திகதி முடிவடைந்ததும் இச்சந்திப்பு நிகழும். ஏற்கனவே 1-ம் திகதி நாடு திரும்புவதாக இருந்த இலங்கை ஜனுதிபதி சிலதினங்கள் இங்கு தங்கியிருந்து இந்திராவுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்னரே நாடு திரும்புவார் என்று தெரிகிறது. (கு)

## புதுடில்லி திரும்பியுள்ளனர்

கோவா நவ: 27

புதுடில்லியில் 3 நாள் மகாநாட்டினை முடித்துக் கொண்டு கோவாவில் ஓய்வுக்காக சென்றிருந்த ''காமன் வெல்த்'' தலைவர்கள் புதுடில்லி திரும்பியுள்ளார்கள். இவர்கள் மகாநாடு இன்று மீண்டும் புதுடில்லியில் ஆரம்பமாகிறது.

(சூ)

## பாதுகாப்பில்லாத...

(1ம்பக்கத் தொடர்ச்சி)

பழைய இடங்களுக்கு செல்வதற்கு எவருமே விருப்பம் தெரிவிக்கவில்லை.

முகாம் நிர்வாகிகளையும் திரு. பீட்டர்கெனமன் சந்தித்துப் பேசினுர். 30 அகதிகளுக்கு காணிவழங்க ஒழுங்குகள் செய்யப்படுவதாக அவரிடம் தெரிவிக்கப்பட்டது. (க-கு)

## வாகனங்கள் சோதனை

(மாவிட்டபுரம்)

வாகன வருடாந்தவரி செலுத்தாதவர்களை கண்டு பிடிப்பதில் காங்கேசன்துறைப் பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

தாம் பாவிக்கும் வாகனங்களுக்கும், சைக்கிள்களுக்கும் உரிய இவ்வருடவரி செலுத்தாதவர்களை கண்டுபிடிப்பதற்காக காங்கேசன் துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. வி. இரத்தினசபாபதி தலைமையில் பொலிஸ் கோஷ்டியினர் வீதிகள் தோறும் வாகனங்களையும் சைக்கிள்களையும் மறித்துச் சோதனைசெய்து வருகிறுர்கள்.

வரிசெலுத்திய பற்றுச்சீட்டும், லைசன்ஸ், இன்சூரன்ஸ் போன்றவற்றையும் இவர்கள் சோதனை செய்துவருகிறுர்கள்.

## மரண அறிவித்தல்

### மார்க்கண்டு அருணுசலம்

சித்தன்கேணி மார்க்கண்டு அருணுசலம் (ஓய்வுபெற்ற மலேசியாக் கல்வி அதிகாரி Kuala Lumpur) இல் காலமானுர். இவர் அன்னம்மாவின் அன்புக் கணவரும், பொறியியலாளர் சிவானந்தனின் தந்தையும். சித்தன்கேணி இ. மு. அருணுசலம் சமாதான நீதிவானின் தமையனுரும், காலம்சென்ற திருமதி மங்கையற்கரசி குமாரசாமியின் தம்பியாரும், குமாரசாமி கதிர்காமத்தையா, திருமதிகள் நகுலேஸ்வரி கனகசபை, கமலாதேவி இராசதுரை, செல்வி தனபாக்கிய செல்வ இலட்சுமி ஆகியோரின் மாமனுமாவார்.

சித்தன்கேணியில் அன்னுரின் சகோதரியின் இல்லத்தில் இங்கு உள்ள அவரின் உறவினர்கள், நண்பர்கள், துக்கம் அனுட்டிப்பதற்கு கூடுவர்.

10205

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் சபாரெத்தினம்

78, சிவன் கோவில் வடக்கு வீதியைச் சேர்ந்த (வைத்திஸ்வர வித்தியாலயம் முன்பாக) பொன்னம்பலம் சபாரெத்தினம் 27-11-83ல் காலமானுர்.

இவர் கந்தையா மகேஸ்வரி, காலஞ்சென்ற மார்க்கண்டு தையல்நாயகி ஆகியோரின் அன்புச் சகோதரரும், பர்வதாதேவி (இ. மி சபை), பசுபதிராஜா (சுகாதார திணைக்களம்), சுரேந்திரன். நவரத்தினராஜா பாலசரஸ்வதி (சண்முகலிங்கம் டிஸ்பென்ஷரி), வசந்தி, ஜெயந்தி (வரி-கணக்காய்வு சேவை), மைதிலி ஆகியோரின் அருமை மாமனுரும், நவரத்தினராஜாவின் பெரிய தகப்பனுமாவார்.

அன்னுரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று (28-11-83) பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

10211

## மரண அறிவித்தல்

### தியோ பத்திநாதர்

சமாதான நீதிவான் யாழ். வாடிவீட்டதிபர் காலமானுர்

இவர் திரேசம்மா(பவுணம்மா)வின் அன்புக்கணவரும் பத்மாவதி, திலகவதி, ஜெயவதி ஆகியோரின் அன்புத்தந்தையும், அ. அமிர்தநாதர்(விஜயரெட்ணம்) யா. மா. ந. சபை, ம. மரியநாயகம் (ஜெயசீலன்) வா. வீ. அதிபர் பருத்தித்துறை, என். எம். பாலச்சந்திரன் (மரியதாஸ்) ஜெயா கிறீம் கவுஸ் ஆகியோரின் மாமனுரும். காலம் சென்ற தீ. அருள்ராசா, அற்புதமுத்து மரியாம்பிள்ளை, சின்னமணி பேதுருப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும் காலம்சென்ற க. மரியாம்பிள்ளை (ராசமாணிக்கம்), காலஞ்சென்ற அருள்ராசாவின் மனைவி திரேசம்மா (ஞானரத்தினம்) அவர்களின் மைத்துனருமாவார். அன்னுரின் பிரேத அடக்கம் 29-11-83 செவ்வாய்க்கிழமை பி. ப. 4-30 மணிக்கு அவரது 3ம் குறுக்கு வீதி இல்லத்தில் இருந்து நாவாந்துறை சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறேம்.

10208

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், வெலிங்டன் மேற்கு வீதி, 68-ம்இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு நவம்பர் மாதம் 28-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O.Box: 49, Telephone: 22389 —24126.